# 2018
# ஆண்டறிக்கை

**ரணவிரு சேவா அதிகாரசபை**

**பாதுகாப்பு இராஜாங்க அமைச்சு**

# உள்ளடக்கம்

ரணவிரு சேவா அதிகாரசபை.................................................................................................... 01

எமது நோக்கு மற்றும் எமது பணி.......................................................................................... 02

ரணவிரு சேவா அதிகாரசபையின் பணிகள்............................................................................ 03

தலைவரின் ஆசிச் செய்தி......................................................................................................... 06

நிறுவனத்தின் பணிப்பாளர் சபை.............................................................................................. 08

எமது செயற்திட்டங்கள்............................................................................................................ 09

01. அங்கவீனமுற்ற இராணுவ வீரர்களின் புனர்வாழ்வு மற்றும் பராமரிப்பு .............................. 10-16
- 1.1. அங்கவீன உபகரணங்கள், உதவி உபகரணங்கள் வழங்குதல்
- 1.2. அங்கவீனமுற்ற இராணுவ வீரர்களின் துப்புரவு வசதி அபிவிருத்தி
- 1.3. அங்கவீனமுற்ற இராணுவ வீரர்களுக்காக பயிற்சிச் செயலமர்வுகளை நடாத்துதல்
- 1.4. விளையாட்டுக் கழகங்களை உருவாக்குதல்

02. இராணுவ வீரர்களுக்கு வீடுகள் வழங்குதல் மற்றும் அதற்கு உதவி செய்தல் ……………..... 17-21
- 2.1. விரு சுமிதுரு வீடமைப்புச் செயற்திட்டம்
- 2.2. வீடமைப்புக் கடன் வழங்குதல்
- 2.3. அவசர அனர்த்தங்களின் போது நிதியுதவி வழங்குதல்
- 2.4. காணி வழங்குதல்

03. மருத்துவ வசதிகளை வழங்குதல் மற்றும் அதற்கு உதவுதல் .............................................. 22-23
- 3.1. மருத்துவ உதவிகள் வழங்குதல்

04. கல்வி மற்றும் உயர் கல்விக்கான அணுகலைப் பெறுவதற்கான வாய்ப்புக்களை வழங்குதல்.
……………………………………………………………………………………………… . 24-26
- 4.1. இராணுவ வீரர்களின் பிள்ளைகளுக்கான சேமிப்பு முதலீட்டு புலமைப் பரிசில் திட்டம்
- 4.2. க.பொ.த உயர் தர புலமைப் பரிசில் திட்டம்
- 4.3. உயர் கல்வி நிதியுதவி
- 4.4. மாபிய கெபகரு புலமைப் பரிசில்
- 4.5 திறன் ஊக்குவிப்பு உதவி
- 4.6 திறன் ஊக்குவிப்புக் கடன்

05. பயனுறுதி வாய்ந்த ஊழியத்தைப் பாதுகாப்பதற்கான ஒத்துழைப்பு .................................. 27-28

5.1. சுயதொழில் கடன் வழங்கல்
5.2. சுயதொழில் உதவி வழங்கல்
5.3. தொழில்முயற்சி அபிவிருத்திச் செயலமர்வுகளை நடாத்துதல்

06. அதிகாரசபையின் பணிகளை நிறைவேற்றுவதற்குத் தேவையான அல்லது சாதகமான அனைத்தையும் செய்தல் .......................................................................................... 29-34

6.1. ரணவிரு மாபிய சுரக்கும் நிகழ்ச்சித்திட்டம்
6.2. ரணவிரு மாபிய ரெகவரண பயன்கள்
6.3. ரணவிரு சங்சத மாவட்ட அறிவூட்டல்
6.4. இராணுவ வீரர் ஞாபகார்த்தச் செயற்திட்டம்
6.5. மயிலப்பிட்டி பூங்கா பராமரிப்பு மற்றும் அபிவிருத்திச் செயற்பாடுகள்
6.6. யாகபத்தை - ரணவிரு முதியோர் பாதுகாப்பு இல்லம் மற்றும் வள நிலையம்
6.7 "விருசர சிறப்புரிமை" அட்டை
6.8. "சென்ஹிரு சியபத" செயற்திட்டம்
6.9. ரணவிரு மகளிர் மற்றும் சிறுவர் அபிவிருத்தி அலகு

07.1999 ஆம் ஆண்டின் 54 ஆம் இலக்க ரணவிரு சேவை அதிகாரசபைச் சட்டத்தின் மூலம் ஒப்படைக்கப்பட்டுள்ள பணிகளை நிறைவேற்றும் போது எதிர்நோக்கிய நிதி ஏற்பாடுகளைப் பெற்றுக் கொள்வதற்கான சிக்கல் ......................................................................... 36-43

கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை …………………………………………………………… 44-53

இறுதிக் கணக்கறிக்கைகள் ........................................................................................ 54-64

**ஆண்டறிக்கை - 2018** **ஆங்கில மொழிபெயர்ப்பு**

# ரணவிரு சேவா அதிகாரசபை

மனதின் நாகரிகத்தைக் கட்டியெழுப்பி படிப்படியாக முன்னேற்றமான பொருளாதாரத்தை வளர்ச்சியை அடைந்த போது தனது இனத்தினதும் நாகரிகத்தினதும் பாதுகாப்புக்காக பயிற்சி பெற்ற முழு நேர பாதுகாவலர்களை ஈடுபடுத்தி பாதுகாப்புச் சேவையை ஒரு தொழிலாக மாற்றுவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளமையை புராதன நாகரிகங்களை ஆய்வு செய்யும் போது அவதானிக்க முடியும். அதற்கிணங்க, மிகப் பழைய காலம் தொட்டு பாதுகாப்புச் சேவைகள் ஒரு தொழிலாக ஒழுங்கமைக்கப்பட்டு தற்போது மிகவும் முன்னேற்றகரமான தொழில்நுட்ப உபகரணங்களையும், யுத்த உபகரணங்களையும் யுத்த தந்திரங்களையும் பயன்படுத்தும் நிலைக்கு வளர்ச்சியடைந்துள்ளது. யுத்தத்தில் தனது இனத்தினதும் நாகரிகத்தினதும் இருப்புக்காக பெறும் சம்பளத்துக்குள் நின்றுவிடாது செயற்படும் பாதுகாப்புச் சேவைகளில் ஈடுபடுபட்டவர்களை மிகப் பழைய காலத்தில் மட்டுமன்றி தற்போது மிகவும் உயர்ந்த வீரர்களாக மதிப்பதற்கும் அவர்களில் தங்கி வாழ்வோரைப் பாதுகாப்பதற்கும் முன்னேற்றகரமான நாகரிகத்தைக் கொண்ட தேசங்கள் நடவடிக்கை எடுத்துள்ளன.

தற்போதைய உலகளாவிய புவியியல் அரசியல் குறிக்கோள்களை அடைவதற்காக சக்திமிக்க இனங்கள் பயங்கரவாதம், சிவில் போராட்டம் மற்றும் கொரில்லா யுத்தம் என்பவற்றை பயன்படுத்தி வருகின்றன. அவ்வாறு மனிதனால் உருவாக்கப்பட்டுள்ள யுத்தங்கள் மனித இனத்தை மிக மோசமான அழிவுக்குள் தள்ளியுள்ளன.

ஒரு தேசம் என்ற வகையில் இலங்கையும் மூன்று தசாப்தங்களாக வடக்கு கிழக்கு மாகாணங்களை அடிப்படையாகக் கொண்டு இயங்கி வந்த உலகின் மிகக் கொடூரமான பயங்கரவாதத்துக்கு முகங்கொடுக்க வேண்டி ஏற்பட்டது.

அதன் போது பாதுகாப்பு படைகளின் அங்கத்தவர்கள் வெறுமனே சம்பளத்தை மாத்திரம் குறிக்கோளாகக் கொண்டு தொழில்புரிவதற்கு அப்பால் சென்று நாட்டையும் நாட்டு மக்களையும் பாதுகாப்பதற்காக உடல் மற்றும் உயிர்த் தியாகங்களைச் செய்துள்ளனர்.

அவர்கள் எதிர்கொண்ட மிக மோசமான யுத்தத்தின் காரணமாக உயிர்த் தியாகம் செய்த இராணுவ வீரர்களின் மிக நெருங்கிய உறவினர்கள் மற்றும் உடல்ரீதியான தியாகங்களைச் செய்த இராணுவ வீரர்கள் அடங்கலாக உறவினர்கள் உள, சமூக மற்றும் பொருளாதார ரீதியாக பாதிக்கப்படுவது தவிர்க்க முடியாத ஒரு விடயமாகக் காணப்பட்டது.

யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட பாதுகாப்பு படை அங்கத்தவர்களுக்கும் அவர்களின் குடும்ப அங்கத்தவர்களுக்கும் சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளை உரித்தாக்குவதன் மூலம் அவர்களைப் பொருளாதாரப் பாதிப்புக்களிலிருந்து பாதுகாப்பதற்கு யுத்தத்தின் ஆரம்ப கட்டத்திலேயே நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. 1999 ஆம் ஆண்டின் 54 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலம் தாபிக்கப்பட்ட ரணவிரு சேவா அதிகாரசபையின் ஊடாக இரண்டு தசாப்தங்களாக குறைபாடாகக் காணப்பட்ட முறையான சமூக உளவியல் புனர்வாழ்வுச் செயற்பாடுகளை மேற்கொள்ளும் சிவில் நிறுவனமொன்றின தேவைப்பாடு பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. தற்போது ரணவிரு சேவா அதிகாரசபை சமுதாய அடிப்படையிலான புனர்வாழ்வுச் செயற்பாடுகளை மேற்கொள்கின்ற பிரதானமான நியதிச்சட்ட நிறுவனமாக வளர்ச்சியடைந்துள்ளது.

## எமது நோக்கு...

இராணுவ வீரர்களுக்கு தேசத்தின் நன்றிக் கடனை நிறைவேற்றுதல்.

## எமது பணி....

இலங்கையின் ஐக்கியத்தைப் பாதுகாப்பதற்காக உயிர்த் தியாகம் செய்த, காணாமல் போன மற்றும் அங்கவீனமுற்ற இராணுவ வீரர்களினதும் அவர்களின் குடும்ப அங்கத்தவர்களினதும் சமூக மற்றும் உளவியல் ஸ்திரத் தன்மையை ஏற்படுத்துவதும் சேவையிலுள்ள இராணுவ வீரர்களிடமும் அவர்களின் குடும்பங்களிலும் உளவில் மறுமலர்ச்சியை ஏற்படுத்தும் விதத்தில் செயற்படுதலும்.

# ரணவிரு சேவா அதிகாரசபையின் பணிகள்

(அ) யுத்தத்தின் போது அங்கவீனமுற்றுள்ள ஆயுதப் படைகளினதும் பொலிஸ் படையினதும் அங்கவீனர்களின் பராமரிப்பு மற்றும் அவர்களுக்குப் புனர்வாழ்வளிப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்தல்;

(ஆ) (i) யுத்தத்தின் போது அங்கவீனமுற்றுள்ள ஆயுதப் படைகளின் மற்றும் பொலிஸ் படையின் அங்கத்தவர்களுக்கும்;

(ii) யுத்தத்தின் போது உயிரிழந்த அல்லது காணாமல் போன ஆயுதப்படைகளினதும் பொலிஸ் படையினதும் அங்கத்தவர்களில் தங்கி வாழ்வோருக்கும்;

**வீடுகள் வழங்குதல் மற்றும் அதற்கு ஒத்துழைப்பு வழங்குதல்**

(உ) (i) யுத்தத்தின் போது அங்கவீனமுற்றுள்ள ஆயுதப் படை மற்றும் பொலிஸ் படை அங்கத்தவர்களுக்கும்;

(ii) யுத்தத்தின் போது உயிரிழந்த அல்லது காணாமல் போன ஆயுதப்படைகளினதும் பொலிஸ் படையினதும் அங்கத்தவர்களில் தங்கி வாழ்வோருக்கும்,

**மருத்துவ வசதிகளை வழங்குதல் மற்றும் அதற்கு ஒத்துழைப்பு வழங்குதல்;**

(ஈ) (i) யுத்தத்தின் போது அங்கவீனமுற்றுள்ள ஆயுதப் படைகளினதும் பொலிஸ் படையினதும் அங்கத்தவர்களுக்கும்;

(ii) யுத்தத்தின் போது உயிரிழந்த அல்லது காணாமல் போன ஆயுதப்படைகளினதும் பொலிஸ் படையினதும் அங்கத்தவர்களில் தங்கி வாழ்வோருக்கும்,

**புலமைப் பரிசில்கள் மற்றும் வேறு விதமான உதவிகளை வழங்குவதன் மூலம் அவர்களுக்கு கல்வி மற்றும் உயர் கல்விக்கான அணுகலைப் பெறுவதற்கான வாய்ப்புக்களைப் பெற்றுக் கொடுத்தல் ;**

(உ) (i) யுத்தத்தின் போது அங்கவீனமுற்றுள்ள ஆயுதப் படைகளினதும் பொலிஸ் படையினதும் அங்கத்தவர்களுக்கும்;

(ii) யுத்தத்தின் போது உயிரிழந்த மற்றும் காணாமல் போன ஆயுதப்படைகளினதும் பொலிஸ் படையினதும் அங்கத்தவர்களில் தங்கி வாழ்வோருக்கும்;

**பயனுறுதி வாய்ந்த ஊழியப் பாதுகாப்பினை வழங்குவதற்கு ஒத்துழைத்தல்;**

(ஊ) யுத்தத்தின போது அங்கவீனமடைந்துள்ள ஆயுதப் படைகளினதும் பொலிஸ் படையினதும் அங்கத்தவர்களுக்கும் சேவை செய்யும் குறிக்கோள்கோளுடன் தொழில்நுட்ப, விவசாய மற்றும் வணிகத் தொழில் முயற்சிகளை நிறுவுதல்; மற்றும்

(எ) அதிகாரசபையின் பணிகளை நிறைவேற்றுவதற்குத் தேவையான அல்லது சாதகமான அனைத்தையும் செய்தல்.

# ரணவிரு சேவா அதிகாரசபைத் தலைவரின் ஆசிச் செய்தி.......



யுத்தச் செயற்பாடுகளின் போது உயிர்த் தியாகம் செய்த மற்றும் உடல் உறுப்புக்களை இழந்த இராணுவ வீரர்களின் நலனோம்பல் மற்றும் அவர்களைப் பராமரிக்கும் செயற்பாடுகள் 1999 ஆம் ஆண்டின் 54 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலம் ரணவிரு சேவா அதிகாரசபையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

2018 ஆம் ஆண்டில் ரணவிரு சேவா அதிகாரசபையின் சேவைகளை சேவைபெறுநர்களான இராணுவ வீரர்களிடம் கொண்டு செல்வதில் உயர் தரத்திலான சேவையினை வழங்குவதற்குத் திட்டமிட்டு அவற்றை நடைமுறைப்படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

குறிப்பாக பலவீனமடைந்து ஓய்வுபெறச் செய்யப்பட்ட 100% பலவீனம் கொண்ட வீடுகளில் முடங்கிக் கிடக்கும் இராணுவ வீரர்கள் தொடர்பில் தேடியறிந்து நடவடிக்கை எடுப்பது ரணவிரு சேவா அதிகாரசபையின் மாகாண மற்றும் மாவட்ட உத்தியோகத்தர்கள் மூலம் சாத்தியப்பட்டுள்ளது. ஒரு நிறுவனம் என்ற வகையில் ரணவிரு சேவா அதிகாரசபையின் முக்கிய பணி பிந்திய பராமரிப்பு மற்றும் புனர்வாழ்வுச் செயற்பாடுகள் மற்றும் இராணுவ வீரர்களின் பிள்ளைகளின் கல்வி, பெண்களைத் தலைவிகளாகக் கொண்ட குடும்பங்களுக்கு முன்னுரிமை வழங்கி இராணுவ வீரர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பதாகும். கடந்த 2018 ஆம் ஆண்டில் ஆகக் குறைந்த செலவில் அந்த முக்கிய குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்குத் தேவையான திசையில் ரணவிரு சேவா அதிகாரசபையை வழிநடாத்துவதற்குத் தேவையான அடிப்படைகளை இடுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

அது தவிர, வருடாந்தம் மேற்கொள்ளப்பட்டு வரும் இராணுவ வீரர்களுக்கான நலனோம்பல் நிகழ்ச்சிகளைத் தொடர்ந்தும் நடைமுறைப்படுத்த முடிந்தது. இந்தச் செயற்பாடுகளை வெற்றிகரமாக மேற்கொள்வதற்கு ஒத்துழைப்பு வழங்கிய பாதுகாப்பு இராஜாங்க அமைச்சின் செயலாளர் உள்ளிட்ட ஊழியர் குழாத்திற்கு ரணவிரு சேவா அதிகாரசபையின் ஊழியர் குழாத்திற்கும் முகாமைத்துவ சபையின் சார்பில் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஜேஜேபிஎஸ்டி லியனகே ஆர்எஸ்பி, வீஎஸ்வீ, யூஎஸ்பி, என்டிசீ, எல்டிஎம்சீ, ஐஜீ
மேஜர் ஜெனரல் (ஓய்வுபெற்ற)
தலைவர்
ரணவிரு சேவா அதிகாரசபை

# நிறுவனத்தின் பணிப்பாளர் சபை

1. **திருமதி அனோமா பொன்சேகா**
தலைவர், ரணவிரு சேவா அதிகாரசபை

2. **திருமதி உபுலாங்கனீ மாலகமுவ**
உப தலைவர், ரணவிரு சேவா அதிகாரசபை

3. **செல்வி ஐ.ரீ. வீரசிங்ஹ**
மேலதிக செயலாளர் , பாதுகாப்பு இராஜாங்க அமைச்சு

4. **திருமதி வை.பீ. சுமணாவதீ**
பணிப்பாளர், தேசிய வரவுசெலவுத்திட்டத் திணைக்களம்

5. **மேஜர் ஜெனரல் திரு. டபிள்யு.பி.டி. பண்டுல பெர்னாண்டோ**
பதவிநிலைப் பிரதானி, இலங்கை இராணுவம்

6. **ரியர் அட்மிரல் திரு. பியல் டி சில்வா**
பதவிநிலைப் பிரதானி, இலங்கை கடற்படை

7. **எயார் வைஸ் மார்ஷல் திரு. டி.எல்.எஸ் டயஸ்**
பணிப்பாளர் நலன்புரி, இலங்கை வான்படை

8. **திரு. எம்.டி. ரஜித ஸ்ரீ தமிந்த**
பிரதி பொலிமா அதிபர் நலன்புரி, இலங்கை பொலிஸ்

9. **மேஜர் ஜெனரல் திரு. டி.எம்.டி. அல்விஸ்**
முகாமைத்துவ சபை அங்கத்தவர்

10. **திருமதி ஜீ.பீ. நில்மினி பெரேரா**
முகாமைத்துவ சபை அங்கத்தவர்

11. **திரு. டபிள்யு.பீ. நிமல் பெர்னாண்டொ**
முகாமைத்துவ சபை அங்கத்தவர்

# எமது செயற்திட்டங்கள்

# - 01–

# அங்கவீனமுற்ற இராணுவ வீரர்களுக்கான புனர்வாழ்வு மற்றும் பராமரிப்பு

யுத்தச் செயற்பாடுகளின் போது பயங்கரவாதத் தாக்குதல்களுக்கு ஆளாகி அங்கவீனமடைந்த மருத்துவ வகைப்படுத்தலுக்கு இணங்க ஓய்வுபெறச் செய்யப்பட்ட அங்கவீனமுற்ற இராணுவ வீரர்களுக்குப் புனர்வாழ்வளித்து பராமரிக்கும் பணி ரணவிரு சேவா அதிகாரசபையினால் மேற்கொள்ளப்படுகின்றது.அதன் போது இராணுவ வீரர்களுக்கு உடல், உள மற்றும் சமூக ரீதியாக வலுவூட்டி அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தி பேணி வருவதற்குத் தேவையான செயற்பாடுகள் இச்செயற்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படுகின்றன.

## 1.1 அங்கவீன உபகரணங்கள், உதவி உபகரணங்கள் வழங்குதல்.

யுத்தத்தின் போது விபத்துக்குள்ளானதன் காரணமாக தமது நாளாந்த செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்கு உபகரணங்கள் தேவைப்படுகின்ற இராணுவ வீரர்களுக்கு உதவி உபகரணங்களை வழங்குவதற்கு 2018 ஆம் பின்வரும் விதத்தில் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

| விடயம் | மேல் மாகாணம் | தென் மாகாணம் | மத்திய மாகாணம் | கிழக்கு மாகாணம் | வடமேல் மாகாணம் | வட மத்திய மாகாணம் | சப்ரகமுவ மாகாணம் | ஊவா மாகாணம் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஊன்றுகோல்கள் (சோடி) | 05 | 14 | 1 | - | - | 10 | - | - | **30** |
| ஊன்றுகோல் (சோடி) | 2 | - | - | - | - | - | 01 | - | **03** |
| சக்கர நாற்காலி (சாதாரண) | 13 | - | 4 | 7 | 3 | - | 3 | 1 | **31** |
| சக்கர நாற்காலி (கொமட்) | - | - | - | - | - | 01 | - | - | **01** |
| ட்ரைசிக்கள் | - | - | - | - | - | - | - | - | **-** |
| செயற்கை கால்கள் - ரணவிரு சேவா அதிகாரசபை மூலம் | - | - | 4 | - | 1 | 1 | - | - | **6** |
| சிறுநீர்ப் பை | 60 | 35 | 60 | | | | 15 | | **170** |








## 1.2. அங்கவீனமுற்ற இராணுவ வீரர்களின் துப்புரவு வசதி அபிவிருத்தி

அங்கவீனமுற்ற இராணுவ வீரர்களின் உடல் சுகாதாரத்தை பாதுகாப்பாகப் பேணி வரக் கூடிய வகையில் சுகாதாரப் பாதுகாப்பான குளியலறைகளை நிர்மாணிப்பதற்கு இச்செயற்திட்டத்தின் கீழ் நிதியுதவி வழங்கப்படுகின்றது.அங்கவீனத்துப் பொருத்தமான புதிய அம்சங்களையும் உபகரணங்களையும் அங்கவீனமுற்ற ஆட்களுக்கான அணுகல் பாதைகளைக் கொண்டதாக குளியலறைகளை நிர்மாணிப்பதற்கு இதன் மூலம் இராணுவ வீரர்கள் ஊக்குவிக்கப்படுகின்றனர். 2018 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட பயன்களின் விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| **மாவட்டம்** | **பயனாளிகளின் எண்ணிக்கை** |
|---|---|
| கொழும்பு | - |
| களுத்துறை | 05 |
| கம்பஹா | 03 |
| காலி | 01 |
| மாத்தறை | - |
| அம்பாந்தோட்டை | - |
| கண்டி | - |
| மாத்தளை | 06 |
| நுவரெலியா | 02 |
| பதுளை | 03 |
| மொனராகலை | 03 |
| கேகாலை | 05 |
| இரத்தினபுரி | 02 |
| குருணாகல் | 09 |
| புத்தளம் | 01 |
| அம்பாறை | 04 |
| திருகோணமலை | - |
| அநுராதபுரம் | 09 |
| பொலனறுவை | 04 |



**துப்புரவு உதவி வழங்குவதற்கு முன்னர் மற்றும் வழங்கிய பின்னரான நிலைமைகள்**





## 1.3. அங்கவீனர் இராணுவ வீரர் பயிற்சிச் செயலமர்வு நடாத்துதல்

அங்கவீனமடைந்ததன் காரணமாக ஓய்வுபெறச் செய்யப்பட்ட இராணுவ வீரர்கள் சிவில் சமூகத்தில் தமது நாளாந்த வாழ்க்கையை கொண்டு நடாத்துகிறார்கள்.அவர்கள் யுத்தத்தின் போது மிக மோசமான சண்டைகளை எதிர்கொண்டு காயமடைந்துள்ளனர்.அதன் காரணமாக அவர்கள் பல்வேறு உளவியல் சிக்கல்களுக்கு ஆளாகிய அவர்களும் அவர்களின் குடும்ப அங்கத்தவர்களும் சிக்கலான நிலைகளை எதிர்கொள்கின்றனர்.

அவர்கள் தனி மனிதர்களாகவும், குடும்பங்களாகவும் தனிமைப்பட்டவர்களாக மாறியுள்ளனர்.இந்த நிலைமையைத் தவிர்த்து இராணுவ வீரர்களை மாவட்ட மற்றும் மாகாண மட்டங்களில் ஒன்றிணைத்து அவர்களுக்கு அறிவூட்டி சமூக, உளவியல் மற்றும் ஆன்மிக ரீதியில் போஷிப்பதை குறிக்கோளாகக் கொண்டு இச்செயலமர்வுகள் நடாத்தப்படுகின்றன.
இச்செயலமர்வுகளுடன் இணைந்த வகையில் அவர்களின் சுகாதாரப் பிரச்சினைகளை அடையாளம் காணுவதற்கும் செயற்கை கால்களைத் தயாரிப்பதற்கும் தேவையான அளவுகள் எடுக்கப்பட்டு வருகின்றன. 2018 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட நிகழ்ச்சிகள் தொடர்பான விபரங்கள் மறு பக்கத்தில் தரப்பட்டுள்ளன.

| **தொடர் இலக்கம்** | **மாகாணம்** | **மாவட்டம்** | **இடம் மற்றும் திகதி** | **பங்குபற்றியோர் எண்ணிக்கை** |
|---|---|---|---|---|
| 01 | மேல் மாகாணம் | கொழும்பு | பட்டங்கலை இளைஞர் சேவை பயிற்சி நிலையம் **2018.03.13, 14** | அங்கவீனமுற்ற இராணுவ வீரர்ககள் 90 பேர் |
| | | கம்பஹா | | |
| 02 | மத்திய மாகாணம் | கண்டி | பொல்கொல்லை தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவனம் **2018.02.15, 16** | அங்கவீனமுற்ற இராணுவ வீரர்ககள் 90 பேர் |
| | | மாத்தளை | நாவுல விசேட அதிரடிப்படை முகாம் **2018.11.27** | அங்கவீனமுற்ற இராணுவ வீரர்கள் 109 பேர் |
| | | நுவரெலியா | 03 ஆம் சிங்ஹ ரெஜிமண்ட வளாகம் - நுவரெலியா **2018.11.28** | அங்கவீனமுற்ற இராணுவ வீரர்ககள் 47 பேர் |
| 03 | கிழக்கு மாகாணம் | அம்பாறை | கொண்டுவட்டுவானை யுத்தப் பயிற்சிப் பாடசாலை - அம்பாறை **2018.10.15, 16** | அங்கவீனமுற்ற இராணுவ வீரர்ககள் 67 பேர் |
| | | திருகோணமலை | ஸ்ரீ போதிபாதாராம மஹா விகாரை - உப்புவேலி 2018.12.18 | அங்கவீனமுற்ற இராணுவ வீரர்ககள் 72 பேர் |
| | | பொலனறுவை | மின்னேரிய காலாட் படைப் பயிற்சி நிலையம் **2018.08.15, 16** | அங்கவீனமுற்ற இராணுவ வீரர்ககள் 34 பேர் |
| 04 | தென் மாகாணம் | அம்பாந்தோட்டை | தங்காலை கடற்படை முகாம் - மாலிமா வரவேற்பு மண்டபம் 2018.10.05 | அங்கவீனமுற்ற இராணுவ வீரர்கள் 130 பேர் |




**அங்கவீனமுற்ற இராணுவ வீர்களின் பயிற்சிச் செயலமர்வின் பல்வேறு சந்தர்ப்பங்கள்**



**செயற்கை கால்களுக்கான**



**உத்தியோகபூர்வ சிகிச்சை பிரயோகச்**





உளவியல் விரிவுரை மூலமான
பிரயோகச் செயற்பாடுகள்





கலாசார மாலைப் பொழுது

## 1.4. விளையாட்டுக் கழகங்களை உருவாக்குதல்



யுத்த அழிவுக்கு முங்கொடுத்த பாதுகாப்புப் பிரிவுகளிலுள்ள பாதிக்கப்பட்டவர்களுக்கு புனர்வாழ்வளிக்கும் செயற்பாட்டுக்குப் பயன்படுத்த முடியுமான பயன்தரக் கூடிய செயற்பாடாக விளையாட்டைக் குறிப்பிட முடியும்.ரணவிரு சேவா அதிகாரசபையானது விளையாட்டைப் பயன்படுத்தி இராணுவ வீரர்களுக்கு வலுவூட்டி புனர்வாழ்வளிப்பதில் வெற்றி கண்டுள்ளது. 2018 ஆம் ஆண்டிற்கான சனாதிபதி தங்கப் பதக்க பரா வொலிபோல் போட்டியின் கேடயத்தை இலங்கை ரணவிரு சேவா அதிகாரசபையின் கரப்பந்தாட்டக் குழு வென்றது.

| அங்கவீனமுற்ற இராணுவ வீரர்களின் பிந்திய பராமரிப்பு மற்றும் புனர்வாழ்வு | பௌதிக | | நிதி (ரூ.மி) | |
|---|---|---|---|---|
| | வருடாந்த இலக்கு | இலக்கை அடைதல் | வருடாந்த ஒதுக்கீடு | செலவிடப்பட்ட தொகை |
| துப்புரவு உதவி - புதிய | 57 | 57 | 3.45 | 2.55 |
| துப்புரவு உதவி - பழைய | 30 | 30 | | |
| அங்கவீனர் உபகரணம் வழங்குதல் | 400 | 245 | 1.95 | 0.87 |
| அங்கவீனர் இராணுவ வீரர் பயிற்சிச் செயலமர்வு | 08 | 08 | 2.20 | 1.07 |
| விளையாட்டுக் கழகங்களை உருவாக்குதல் | 09 | 05 | 0.84 | 0.56 |

## - 02-

# இராணுவ வீரர்களுக்கு வீடுகள் வழங்குதல் மற்றும் அதற்கு ஒத்துழைப்பு வழங்குதல்

யுத்தச் செயற்பாடுகளின் போது அங்கவீனமுற்ற இராணுவ வீரர்கள் மரணித்த அல்லது காணாமல் போன இராணுவ வீரர்களில் தங்கி வாழ்ந்தோருக்கு ரணவிரு சேவா அதிகாரசபைச் சட்டத்தின் மூலம் ஒப்படைக்கப்பட்டுள்ள பொறுப்பின் கீழ் வீடுகள் வழங்குவதற்காகவும் அதற்கான உதவிகளை வழங்குவதற்காகவும் பின்வரும் செயற்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுகின்றன.

2.1. விருசுமிதுரு வீடமைப்புச் செயற்திட்டம்
2.2. வீடமைப்புக் கடன் வழங்குதல்
2.3. அவசர அனர்த்தங்களின் போது நிதியுதவி வழங்குதல்
2.4. காணி வழங்குதல்

## 2.1. விருசுமிதுரு வீடமைப்புச் செயற்திட்டம்




வீடமைப்பு மற்று் நிர்மாண அமைச்சின் கீழுள்ள வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சின் கீழ் உள்ள ரணவிரு சேவா அதிகாரசபை என்பன கூட்டாக நடைமுறைப்படுத்துகின்ற "விருசுமிதுரு" தேசிய வீடமைப்புச் செயற்திட்டம் 2017 ஆம் ஆண்டில் ஆரம்பித்து 2020 ஆம் ஆண்டு வரையில் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

யுத்தச் செயற்பாடுகளின் போது பயங்கரவாதத் தாக்குதல்களுக்கு ஆளாகிய உயிர்த் தியாகம் செய் இராணுவ வீரர்களின் நெருங்கிய உறவினர்கள் மற்றும் யுத்தச் செயற்பாடுகளின் போது பயங்கரவாதத் தாக்குல்களுக்கு ஆளாகி அங்கவீனமடைந்து அதன் காரணமாக ஓய்வுபெற்றுள்ள அங்கவீனமுற்ற இராணுவ வீரர்களின் வீடமைப்புத் தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்வதை முன்னிலைப்படுத்தி இச்செயற்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

விருசுமிதுரு வீடமைப்புச் செயற்திட்டத்தின் மூலம் 2017 முதல் 2020 வரையான 4 வருட காலத்தில் 3650 வீடுகளை நிர்மாணித்து முடிப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ளதுடன், செயற்திட்டத்தின் மொத்தச் செலவு 3192 மில்லியன் ரூபாவாகும்.இந்நிதி பொதுத் திறைசேரியினால் வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபைக்கு வழங்கப்படுவதுடன் பொருத்தமான பயனாளிகளைத் தெரிவு செய்து வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபைக்கு வழங்கும் பணி ரணவிரு சேவா அதிகாரசபையினால் மேற்கொள்ளப்படும்.

- 2018 ஆம் ஆண்டில் பயனாளிகளின் தகைமைகளின் அடிப்படையில் தெரிவு செய்வதற்கான நேர்முகப் பரீட்சைகள் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை உத்தியோயகத்தர்களையும் ரணவிரு சேவா அதிகாரசபை உத்தியோகத்தர்களையும், முப்படைகள் மற்றும் பொலிஸ் உத்தியோகத்தர்களையும் கொண்ட நேர்முகப் பரீட்சைச் சபைகள் ஊடாக ரணவிரு சேவா அதிகாரசபையில் நடாத்தப்பட்டன.

- செயற்திட்டத்தின் மூலம் பயனுரிமைக்காக தெரிவுசெய்யப்பட்ட மொத்த பகுதியளவு மற்றும் முழுமையான வீடுகள் தொடர்பான தரவுகள் கீழே தரப்படுகின்றன.

| மாவட்டம் | **2018 ஆம் ஆண்டுக்காகத் தெரிவு செய்யப்பட்ட முழுமையான வீடுகள்** | | | | | **2018 ஆம் ஆண்டுக்காகத் காசோலைகள் வழங்கப்பட்ட முழுமையான வீடுகள்** | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | இராணுவ | கடற்படை | வான்படை | பொலிஸ் | மொத்தம் | இராணுவ | கடற்படை | வான்படை | பொலிஸ் | மொத்தம் |
| அநுராதபுரம் | **4** | **-** | **-** | **-** | **4** | **3** | - | **-** | **-** | **3** |
| பொலனறுவை | **2** | **-** | **-** | **-** | **2** | **2** | - | **-** | **-** | **2** |
| கொழும்பு | **6** | **-** | **-** | **2** | **8** | **2** | - | **-** | **-** | **2** |
| கம்பஹா | **6** | **-** | **2** | **-** | **8** | **-** | - | **-** | **-** | **0** |
| களுத்துறை | **8** | **-** | **-** | **-** | **8** | **2** | - | **-** | **-** | **2** |
| காலி | **1** | **-** | **-** | **-** | **1** | **-** | - | **-** | **-** | **0** |
| மாத்தறை | **1** | **-** | **-** | **1** | **2** | **1** | - | **-** | **1** | **2** |
| அம்பாந் தோட்டை | **7** | **-** | **-** | **-** | **7** | **7** | - | **-** | **-** | **7** |
| கேகாலை | **4** | **-** | **-** | **-** | **4** | **2** | - | **-** | **-** | **2** |
| இரத்தினபுரி | **2** | **-** | **-** | **-** | **1** | **1** | - | **-** | **-** | **1** |
| கண்டி | **6** | **2** | **-** | **2** | **10** | **2** | - | **-** | **-** | **2** |
| மாத்தளை | **7** | **1** | **-** | **1** | **9** | **2** | 1 | **-** | **-** | **3** |
| நுவரெலியா | **-** | **-** | **-** | **-** | **0** | **-** | - | **-** | **-** | **0** |
| குருணாகல் | **9** | **-** | **-** | **1** | **10** | **7** | - | **-** | **1** | **8** |
| புத்தளம் | **3** | **-** | **-** | **1** | **4** | **-** | - | **-** | **-** | **0** |
| பதுளை | **11** | **-** | **-** | **-** | **11** | **1** | - | **-** | **-** | **1** |
| மொனராகலை | **3** | **-** | **-** | **-** | **3** | **1** | - | **-** | **-** | **1** |
| திருகோணமலை | **4** | **1** | **-** | **2** | **7** | **1** | 1 | **-** | **-** | **2** |
| அம்பாறை | **6** | **-** | **-** | **-** | **6** | **1** | - | **-** | **-** | **1** |
| மட்டக்களப்பு | **-** | **-** | **-** | **-** | **0** | **-** | - | **-** | **-** | **0** |
| வவுனியா | **-** | **-** | **-** | **-** | **0** | **-** | - | **-** | **-** | **0** |
| மொத்தம் | **90** | **4** | **2** | **10** | **106** | **34** | **2** | **0** | **2** | **38** |

| மாவட்டம் | 2018 ஆம் ஆண்டுக்காகத் தெரிவு செய்யப்பட்ட பகுதியளவு வீடுகள் | | | | | 2018 ஆம் ஆண்டுக்காகத் காசோலைகள் வழங்கப்பட்ட பகுதியளவு வீடுகள் | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | இராணுவ | கடற்படை | வான்படை | பொலிஸ் | மொத்தம் | இராணுவ | கடற்படை | வான்படை | பொலிஸ் | மொத்தம் |
| அநுராதபுரம் | 91 | 4 | 6 | 5 | 106 | 57 | 1 | 3 | 3 | 64 |
| பொலனறுவை | 33 | 3 | 1 | 2 | 39 | 13 | - | - | - | 13 |
| கொழும்பு | 41 | - | 2 | 2 | 45 | 7 | - | - | - | 7 |
| கம்பஹா | 57 | 5 | 10 | 13 | 85 | 5 | - | - | - | 5 |
| களுத்துறை | 19 | 2 | 3 | - | 24 | 3 | 3 | - | - | 6 |
| காலி | 49 | 2 | - | 4 | 55 | - | - | - | - | 0 |
| மாத்தறை | 40 | - | 2 | 5 | 47 | - | - | - | - | 0 |
| அம்பாந் தோட்டை | 80 | 3 | - | 9 | 92 | 77 | 3 | - | 10 | 90 |
| கேகாலை | 75 | 3 | 1 | 4 | 83 | 18 | - | - | 1 | 19 |
| இரத்தினபுரி | 33 | - | - | 2 | 35 | 1 | - | - | - | 1 |
| கண்டி | 45 | 3 | 2 | 7 | 57 | 24 | 1 | - | 1 | 26 |
| மாத்தளை | 55 | - | 1 | 7 | 63 | 6 | - | - | 3 | 9 |
| நுவரெலியா | 6 | - | 1 | 1 | 8 | - | - | - | - | 0 |
| குருணாகல் | 148 | 2 | 1 | 14 | 165 | 98 | 2 | - | 8 | 108 |
| புத்தளம் | 19 | 1 | 3 | 2 | 25 | - | - | - | - | 0 |
| பதுளை | 64 | - | 4 | 2 | 70 | 1 | - | - | - | 1 |
| மொனராகலை | 35 | - | - | 1 | 36 | 23 | - | - | - | 23 |
| திருகோணமலை | 33 | - | - | 8 | 41 | - | - | - | - | 0 |
| அம்பாறை | 65 | - | - | 13 | 78 | 38 | - | - | 11 | 49 |
| மட்டக்களப்பு | - | - | - | - | 0 | - | - | - | - | 0 |
| வவுனியா | - | - | - | - | 0 | - | - | - | - | 0 |
| மொத்தம் | 988 | 28 | 37 | 101 | 1154 | 368 | 10 | 3 | 37 | 418 |

## 2.2. வீடமைப்புக் கடன் வழங்குதல்



ரணவிரு சங்சதகளிலும் கிராமங்களிலும் உள்ள இராணுவ வீரர் குடும்பங்களின் அங்கத்தவர்களின் வீடொன்றை நிர்மாணிக்கும் கனவை நிறைவேற்றும் குறிக்கோளுடன் ரணவிரு சேவா அதிகாரசபை வீடமைப்புக் கடன்களை வழங்கி வருகின்றது. யுத்தத்தின் போது உயிர்த் தியாகம் செய்த, காணாமல் போன இராணுவ வீரர்களின் நெருங்கிய உறவினர்களும் யுத்தத்தின் போது அங்கவீனமுற்ற இராணுவ வீரர்களும் இந்தப் பயன்களைப் பெறத் தகுதியானவர்களாவர்.

இதன் மூலம் 300,000.00 ரூபா கடன் வழங்கப்படுவதுடன் அது 02 தவணைகளில் வழங்கப்படுகின்றது. அதனை மீள அறிவிடும் காலம் 04 வருடங்களாகும். 5% சேவைக் கட்டணத்தின் அடிப்படையில் இந்தக் கடன் வழங்கப்படுகின்றது.

2018 ஆம் ஆண்டில் புதிய வீடமைப்புக் கடன் தவணைகளாக 79 பேருக்கும் வீடமைப்புக் கடனின் இரண்டாவது தவணைப் பணம் 12 பேருக்கும் வழங்கப்பட்டுள்ளது.

**<u>வீடமைப்புக் கடன் நிகழ்ச்சியுடன் தொடர்புடைய அண்மையில் எடுக்கப்பட்ட புகைப்படங்கள்</u>**







## 2.3. திடீர் அனர்த்தங்களின் போது நிதி உதவி வழங்குதல்

இராணுவ வீரர் மன்றங்களின அங்கத்தவர்கள் அல்லது சேவையிலுள்ள அங்கவீனமுற்ற இராணுவ வீரர்களுக்கு ஏற்படும் மண்சரிவு, சூறாவளி, தீ விபத்து மற்றும் வெள்ளம் போன்ற திடீர் அனர்த்த நிலைகளின் போது அவர்களுக்கு ஏற்படும் இழப்புக்களைக் கவனத்திற் கொண்டு அந்த இராணுவ வீரர்களின் குடும்பங்களுக்கு ஆறுதலாக அமைய வேண்டும் என்ற குறிக்கோளுடன் 25,000.00 ரூபாவை உடனடியாக வழங்கி இராணுவ வீரர்களின் குடும்பங்களுக்கு நிதி நிவாரணம் இதன் மூலம் வழங்கப்படுகின்றது.

2018 ஆம் ஆண்டில் 10 பயனாளிகளுக்கு திடீர் அனர்த்த உதவிகள் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன.

## 2.4. காணி வழங்குதல்

ரணவிரு சேவா அதிகாரசபையின் பணிகளை இராணுவ வீரர்களுக்காகவும் அவர்களின் குடும்பங்களுக்காகவும் நிறைவேற்றுவதில் மிகவும் விசேடமானதும் சிக்கலானதுமான ஒரு துறையாக குறித்த குடும்பங்களுக்கு இருப்பிடம் வழங்குவதைக் குறிப்பிட முடியும். எனினும் பெரும்பாலும் வீடமைப்பு மற்றும் சலுகைக் கடன் செயற்திட்டகள் ஊடாக தேவையான நிதி வசதிகளை வழங்கி குடியிருப்பதற்காக வீடொன்றை அமைப்பதற்கு ஊக்கமளித்த போதிலும் அந்த வீட்டை நிர்மாணிப்பதற்கான காணியொன்று உரித்தில்லாத போது இராணுவ வீரரும் அக்குடும்பமும் கடுமை சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

அதற்கான ஒரு தீர்வாக செயற்திட்டத்தின் மூலம் நேரடியாக காணித் துண்டுகள் வழங்குதல் மற்றும் மறைமுகமாக காணிகளைப் பெறுவதற்குத் தேவையான ஒத்துழைப்பு வழங்குதல் என்பன மேற்கொள்ளப்படுகின்றன. அதற்கிணங்க, 2018 ஆம் ஆண்டில் காணிச் செயற்திட்டத்தின் முன்னேற்றம் கீழே தரப்பட்டுள்ளது.

### 2018 ஆம் ஆண்டில் காணித் துண்டுகள் வழங்குதல்

| செயற்பாடு | எண்ணிக்கை |
|---|---|
| பிரதேச செயலகங்களுக்குச் சொந்தமான காணித் துண்டுகளை வழங்குதல் | 28 |
| ரணவிரு கிராமங்களில் காணித் துண்டுகள் வழங்குதல் | 03 |
| காணிக் கச்சேரிகளை நடாத்துதல் | 03 |
| இராணுவ வீரர்களின் கோரிக்கைகளுக்கும் பிரதேச செயலகங்களுக்கு அனுப்பியுள்ள கடிதங்ளுடன் தொடர்புடைய வகையிலும் அனுமதியின்றிக் குடியேறியுள்ள காணிகளுக்கான உறுதிகள்/அனுமதிப்பத்திரங்களைப் பெறுவதற்கு பரிந்துரைகள் வழங்குதல். | 211 |
| அடையாளம் காணப்பட்ட காணிகளுக்காக பெயர்ப் பட்டியல்களைச் சமர்ப்பித்தல் (வீடமைப்பு அதிகாரசபைக்கு, மகாவலி அதிகாரசபைக்கு) | 235 |

**செலவுத் தலைப்பு - நிர்வாகச் செலவுகள் 2018 ஆம் ஆண்டு**

| விபரம் | தொகை (ரூபா |
|---|---|
| இராணுவ வீரர்ககளுக்கு வழங்கப்பட்டுள்ள காணிகள் தொடர்பில் உரிய பிரதேச செயலகங்களினல் நடைபெற்ற கூட்டங்களில் பங்குபற்றியமை - காணி மேற்பார்வைக்காக | 4825.00 |
| மாலம்பே காணியில் கம்பி வேலி நிர்மாணிப்பதற்குச் செலவான தொகை | 10,640.00 |
| மொத்தம் | 15465.00 |

# - 03-

# மருத்துவ வசதிகளை வழங்குதல் மற்றும் அதற்கு ஒத்துழைப்பு வழங்குதல்

அங்கவீன இராணுவ வீரர்கள், அவர்களின் குடும்பங்களிலுள்ள நெருங்கிய உறவினர்கள், உயிர்த்தியாகம் செய்த, காணாமல் போன இராணுவ வீரர்களின் நெருங்கிய உறவினர்கள் ஆகியோருக்கு உடல் ரீதியாகவும் உளரீதியாகவும் வலுவூட்டுவதற்காக ரணவிரு சேவா அதிகாரசபைச் சட்டத்தினால் ஒப்படைக்கப்பட்டுள்ள ஒரு பணியாக மருத்துவ வசதிகளை வழங்குதல் மற்றும் அதற்கு ஒத்துழைப்பு வழங்குதல் என்பவற்றைக் குறிப்பிட முடியும். அதற்கிணங்க, அதனை நிறைவேற்றுவதற்ககா ரணவிரு சேவா அதிகாரசபையினால் பின்வரும் செயற்திட்டங்களும் நிகழ்ச்சிகளும் நடைமுறைப்படுத்தப்படுகின்றன.

## 3.1. மருத்துவ உதவி வழங்குதல்

யுத்தச் செயற்பாடுகளின் காரணமாக அங்கவீனமடைந்து ஓய்வுபெற்று நோயாளிகளாக உள்ள இராணுவ வீரர்கள், அவர்களின் குடும்பங்களின் நெருங்கிய உறவினர்கள் மற்றும் உயிர்த் தியாகம் செய்த இராணுவ வீரர்களின் நெருங்கிய உறவினர்களின் மருத்துவ சிகிச்சை செயற்பாடுகளுக்கான ஒத்துழைப்பு இந்நிகழ்ச்சியின் மூலம் மேற்கொள்ளப்படுகின்றது.

இதன் கீழ் அவசர அறுவை சிகிச்சைக்கு உதவி வழங்குதல், மருத்துவ பரிசோதனைகளுக்கு உதவி வழங்குதல், நோய் நிலைமைகளைத் தவிர்ப்பதற்கான அத்தியவசிய மருத்துவ உபகரணங்கள் வழங்குதல், பொருளாதார கஷ்டங்கள் உள்ள நோய்களினால் பீடிக்கப்பட்டுள்ள விண்ணப்பதாரிகளுக்கு சிகிச்சை பெறுவதற்கு உதவுதல் போன்றவற்றுக்கு இதன் மூலம் உதவி வழங்கப்படுகின்றது.

அதற்கிணங்க, 2018 ஆம் ஆண்டில் பின்வரும் விதத்தில் பயன்கள் வழங்கப்பட்டன.

## <u>பயன்கள் வழங்குதல் (மாவட்ட அடிப்படையில்)</u>

| மாவட்டம் | பயனாளிகளின் எண்ணிக்கை |
|---|---|
| கொழும்பு | 16 |
| களுத்துறை | 10 |
| கம்பஹா | 13 |
| காலி | 05 |
| மாத்தறை | 09 |

| | |
|---|---|
| அம்பாந்தோட்டை | 03 |
| கண்டி | 15 |
| மாத்தளை | 04 |
| நுவரெலியா | 03 |
| பதுளை | 04 |
| மொனராகலை | 0 |
| கேகாலை | 06 |
| இரத்தினபுரி | 07 |
| குருணாகல் | 06 |
| புத்தளம் | 01 |
| அம்பாறை | 03 |
| திருகோணமலை | 0 |
| அநுராதபுரம் | 10 |
| பொலனறுவை | 05 |



# - 04-

# கல்வி மற்றும் உயர்கல்விக்கான அணுகலைப் பெறுவதற்கான வாய்ப்புக்களை வழங்குதல்

ரணவிரு சேவா அதிகாரசபைச் சட்டத்தின் ஒப்படைக்கப்பட்டுள்ள பணிகளின் கீழ் கல்வி மற்றும் உயர்கல்விக்கான அணுகலைப் பெறுவதற்கான வாய்ப்புக்களை வழங்குவதற்காப் பல்வேறு புலமைப் பரிசில் திட்டங்களின் கீழ் அதிகாரசபையினால் மாணவர்களுக்கான உதவிகள் வழங்கப்படுகின்றன. அந்தப் புலமைப் பரிசில் திட்டங்கள் பின்வருவனவாகும்.

4.1. இராணுவ வீரர்களின் பிள்ளைகளுக்கான சேமிப்பு முதலீட்டு புலமைப் பரிசில் முறை
4.2. க.பொ.த உயர் தர புலமைப் பரிசில் திட்டம்
4.3. உயர் கல்விப் புலமைப்பரிசில்கள்
4.4. மாபிய கெபகரு புலமைப் பரிசல்
4.5. திறன் ஊக்குவிப்பு உதவி
4.6. திறன் விருத்திக் கடன்

## 4.1. இராணுவ வீரர்களின் பிள்ளைகளுக்கான சேமிப்பு முதலீட்டு புலமைப் பரிசில் முறை



யுத்தத்தில் ஈடுபட்டு தமது உயிரைத் தியாகம் செய்த, அங்கவீனமுற்ற மற்றும் அங்கவீனமுற்ற நிலையில் தற்போது சேவையில் ஈடுபட்டுள்ள இராணுவ வீரர்களின் பிள்ளைகளின் கல்விச் செயற்பாடுகளை சிறப்பாக மேற்கொள்வதற்காக 2005 ஆம் ஆண்டு முதல் ரணவிரு தூ தரு சேமிப்பு முதலீட்டு புலமைப் பரிசில் திட்டம் தேசிய சேமிப்பு வங்கியுடன் இணைந்து இராணுவ வீரர்களின் 6 ஆம் தரம் முதல் க.பொ.த. சா/த வரை பயிலும் பிள்ளைளுக்காக நடைமுறைப்படுத்தப்படுகின்றது. இப்பிள்ளைகளின் க.பொ.த. சா/த மற்றும் உ/த கல்விக்காக 12,000/- ரூபா சேமிப்பு கிடைக்கும் விதத்தில் இந்தப் புலமைப் பரிசில் வழங்கப்படுகின்றது.

2018 ஆம் ஆண்டில் ரணவிரு தூ தரு சேமிப்பு முதலீட்டு புலமைப் பரிசில் திட்டத்தின் கீழ் 259 புதிய புலமைப் பரிசில்கள் வழங்கப்பட்டுள்ளன.ஏற்கனவே காணப்பட்ட கணக்குகளுக்கு 1037 புலமைப் பரிசில்கள் வழங்கப்பட்டுள்ளன.

## 4.2. க.பொ.த உயர் தர புலமைப் பரிசில் திட்டம்

க.பொ.த. உ/தர வகுப்புக்களில் கற்கும் பிள்ளைகளுக்காக நடைமுறைப்படுத்தப்படும் இந்தப் புலமைப் பரிசில் திட்டத்தின் கீழ் புலமைப் பரிசில் பெறாத பிள்ளைகளுக்கு க.பொ.த. சா/தர வகுப்பில் அல்லது க.பொ.த. சா/தரத்தில் சிறப்பாகச் சித்தியடைந்து க.பொ.த. உ/தரத்திற்குத் தெரிவு செய்யப்படுகின்ற போது மாதமொன்றுக்கு 500 ரூபா வீதம் அதிகபட்சமாக இரண்டு வருடங்களுக்கு வழங்கப்படுகின்றது.

யுத்தச் செயற்பாட்டில் ஈட்டுபட்டு உயிர்த் தியாகம் செய்த, அங்கவீனமுற்ற ஓய்வுபெற்ற மற்றும் அங்கவீனமுற்ற நிலையில் தற்போது சேவையில் ஈடுபட்டுள்ள இராணுவ வீரர்களின் கல்வி பயிலும் பிள்ளைகளே இதன் பயனாளிகளாவர். 2018 ஆம் ஆண்டில் 286 பிள்ளைகளுக்கு உதவிப் பணம் வழங்கப்பட்டுள்ளது. ஏற்கனவே காணப்பட்ட 692 கணக்குகளில் பணம் வைப்புச் செய்யப்பட்டுள்ளது.

## 4.3. உயர் கல்விப் புலமைப்பரிசில்கள்

இந்தப் புலமைப பரிசில் திட்டத்தின் கீழ் க.பொ.த. உ/தரத்தில் சிறப்பாகச் சித்தியடைந்து அதன் பெறுபேறுகளின் அடிப்படையில் பல்கலைக்கழகங்களுக்கு, கல்விக் கல்லூரிகளுக்கு, அரசாங்கத்தின் அங்கீகரிக்கப்பட்ட உயர் கல்வி நிறுவனங்களுக்கு தெரிவு செய்யப்படும் பிள்ளைகளுக்கு மாதாந்தம் 2000/- ரூபா வீதம் அவர்கள் கல்வி பயிலும் காலத்தில் 4 வருடங்கள் உள்ளடங்கும் விதத்தில் அதிகபட்சமாக 40 தவணைகள் கொண்டதாக இந்த நிதியுதவி வழங்கப்படுகின்றது.

2018 ஆம் ஆண்டில் உயர் கல்வி பெறும் 100 பிள்ளைகளுக்கு புதிதாக புலமைப் பரிசில்கள் வழங்கப்பட்டுள்ளன.ஏற்கனவே கணக்குகள் காணப்பட்ட 261 பேருக்க பணம் வைப்புச் செய்யப்பட்டுள்ளது.

## 4.4. மாபிய கெபகரு புலமைப் பரிசில் செயற்திட்டம்




யுத்தச் செயற்பாடு அல்லாத காரணங்களினால் அங்கவீனமுற்ற இராணுவ வீரர்களின் கல்வி பயிலும் வயதிலுள்ள பிள்ளைகள், அனைத்து இராணுவ வீரர்களின் விசேட கல்வி பயிலும் வயதிலுள்ள பிள்ளைகள், நீண்ட காலம் சிகிச்சை பெற வேண்டிய நோயாளிகளாக உள்ள இராணுவ வீரர்களின் பிள்ளைகள் ஆகியோரின் கல்விச் செயற்பாடுகளை தடங்கலின்றி உரிய முறையில் மேற்கொள்வதற்கு உதவி வழங்குவதற்காக இந்த நிதியுதவி வழங்கப்படுகின்றது.

அதனடிப்படையில் அந்தப் பிள்ளைகள் க.பொ.த. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றும் வரையில் மாதாந்தம் மாபிய கெப்பகரு புலமைப்பரிசில் பணம் வழங்கப்படுவதுடன் அது அதிகாரசபையின் நிதியையும் கொடை வள்ளல்களின் நிதிப் பங்களிப்பையும் பயன்படுத்தி வழங்கப்படுகின்றது.

முதலில் அதிகாரசபையின் நிதியைப் பயன்படுத்தி 500/- ரூபா வழங்கப்படுவதுடன், அதற்கிடையில் தாபரிப்புப் பெற்றோர்களாக பிள்ளைகளின் கல்விக்கு உதவ எதிர்பார்க்கும் கொடை வள்ளல்களின் உதவி நிதிகளைப் பிள்ளைகளுக்கு வழங்குவதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. அதற்கிணங்க, 2018 ஆம் ஆண்டில் 658 பேருக்கு மாபிய கெபகரு புலமைப் பரிசல்கள் வழங்கப்பட்டுள்ளன.

## 4.5. திறன் ஊக்குவிப்பு உதவி

நாட்டுக்காக தமத உடலுறுப்புக்களைத் தியாகம் செய்து அங்கவீனமடைந்துள்ள இராணுவ வீரர்களுக்கும் மற்றும் உயிர்த் தியாகம் செய்த இராணுவ வீரர்களின் குடும்பங்களின் நெருங்கிய உறவினர்களுக்கும் (மகள்/மகன்/மனைவி), இராணுவ வீரர்கள் விவாகமாகாதவர்களாயின் பெற்றோருக்கும்/ விவாகமாகாத சகோதர சகோதரிகளுக்கும் அவர்களின் திறமைகளின் அடிப்படையில் நாட்டுக்கு நற்பெயரைச் சேர்க்கும் நோக்குடன் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு மட்டத்திலான போட்டிகளில பங்குபற்றுவதற்காக உதவி வழங்கப்பட்டுள்ளதுடன் 2018 ஆம் ஆண்டில் 25 பேருக்கு இவ்வாறு நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

## 4.6. திறன் விருத்திக் கடன் வழங்கல்

உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு கல்வி நிறுவனங்களில் உயர் கல்வியைத் தொடர்வதற்கு இராணுவ வீரர்களின் பிள்ளைகளை ஊக்குவித்து சலுகை சேவைக் கட்டணத்தின் கீழ் அதிகபட்சமாக 05 இலட்சம் ரூபா பணம் இக்கடன் திட்டத்தின் கீழ் வழங்கப்படுகின்றது. அதற்கிணங்க, இக்கடன் திட்டத்தின் கீழ் 2018 ஆம் ஆண்டில் ஒருவருக்கு கடன் வழங்கப்பட்டுள்ளது.

.

| கல்வி மற்றும் உயர்கல்விக்கான அணுகலைப் பெறுவதற்கான வாய்ப்புக்களை வழங்குதல். | பௌதிக | | நிதி (ரூ.மி) | |
|---|---|---|---|---|
| | வருடாந்த இலக்கு | இலக்கை அடைதல் | வருடாந்த ஒதுக்கீடு | செலவிடப்பட்ட தொகை |
| ரணவிரு தூதரு சேமிப்பு முதலீட்டுப் புலமைப் பரிசில் - புதியது | **650** | 259 | 17.86 | 14.74 |
| ரணவிரு தூதரு சேமிப்பு முதலீட்டு புலமைப் பரிசில் - பழையது | **1378** | 1037 | | |
| கபொத சா/த/உதர புலமைப் பரிசில் - புதியது | **450** | 286 | | |
| கபொத சா/த/உதர புலமைப் பரிசில் - பழைய | **680** | 692 | | |
| பல்கலைக்கழக கல்வி பெறும் பிள்ளைகளுக்கான புலமைப் பரிசில் - புதியது | **70** | 100 | | |
| பல்கலைக்கழக கல்வி பெறும் பிள்ளைகளுக்கான புலமைப் பரிசில் - பழையது | **240** | 261 | | |
| மாபிய கெபகரு புலமைப் பரிசில் உதவி | **800** | 658 | 4.80 | 5.10 |
| திறன் ஊக்குவிப்பு உதவி | **60** | 25 | 3.00 | 1.18 |
| திறன் ஊக்குவிப்புக் கடன் | **04** | 01 | 2.00 | 0.30 |

# - 05-

# பயனுறுதி வாய்ந்த ஊழியப் பாதுகாப்பினை வழங்குவதற்கு ஒத்துழைத்தல்

ரணவிரு சேவா அதிகாரசபைச் சட்டத்தின் மூலம் ஒப்படைக்கப்பட்டுள்ள பணிகளின் கீழ் பயனுறுதி வாய்ந்த ஊழியப் பாதுகாப்பினை வழங்குவதற்கு ஒத்துழைத்தல் என்ற விடயத்திற்காக இராணுவ வீரர் சமுதாயத்தின் சார்பில் பின்வரும் செயற்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன.

5.1. சுயதொழில் கடன் வழங்குதல்.
5.2. சுயதொழில் உதவி வழங்குதல்.
5.3. தொழில்முயற்சி அபிவிருத்திச் செயலமர்வுகளை நடாத்துதல்

## 5.1. சுயதொழில் கடன் வழங்குதல்.

இராணுவ வீரர் சமுதாயத்திற்கு சுயதொழில்களை ஆரம்பிப்பதற்கும் அவற்றை மேம்படுத்துவதற்கும் நிதி வசதிகளை வழங்குதல் என்பதன் கீழ் வருடாந்தம் 5% சேவைக் கட்டணம் மாத்திரம் அறிவிட்டு 200,000.00 ரூபா கடன வழங்கப்படுகின்றது.

அதற்கிணங்க, 2018 ஆம் ஆண்டில் சுயதொழிலொன்றை ஆரம்பிப்பதற்காகவும் மேம்படுத்துவதற்காகவும் 15 சுயதொழில் கடன்கள் வழங்கப்பட்டுள்ளன. 11 தவணைப் பணங்கள் செலுத்தப்பட்டுள்ளன.

## 5.2. சுயதொழில் உதவி வழங்குதல்.

சம்பள பெறாத இராணுவ வீரர் சமுதாயத்திற்கு கடன் வழங்கும் சாத்தியம் இல்லை (கடனை திருப்பிச் செலுத்தம் ஆற்றல் இல்லாமையினால்) என்பதுடன் சுயதொழிலொன்றை ஆரம்பிப்பதற்கு அல்லது மேம்படுத்துவதற்கு 50,000.00 ரூபா உதவித தொகையொன்று வழங்கப்படுகின்றது.

அதற்கிணங்க, 2018 ஆம் ஆண்டில் 5 சுயதொழில் உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

## 5.3. தொழில்முயற்சி அபிவிருத்திச் செயலமர்வுகளை நடாத்துதல்



இராணுவ வீரர்களை சுயதொழில் செய்வதற்குத் தூண்டுதல், ஈடுபடச் செய்தல், மேம்படுத்துவதற்கான அறிவு, தொழில்நுட்பம் மற்றும் பயிற்சி வழங்குதல் என்பவற்றுக்காக செயலமர்வுகள் நடாத்தப்படுகின்றன.

அதற்கிணங்க, 2018 ஆம் ஆண்டில் வியாபாரத்தில் ஈடுபடத் தூண்டும் ஆரம்ப பயிற்சிச் செயலமர்வொன்று நடாத்தப்பட்டுள்ளது.

| பயனுறுதி வாய்ந்த ஊழியப் பாதுகாப்பினை வழங்குவதற்கு ஒத்துழைத்தல் | பௌதிக | | நிதி (ரூ.மி) | |
|---|---|---|---|---|
| | வருடாந்த இலக்கு | இலக்கை அடைதல் | வருடாந்த ஒதுக்கீடு | செலவிடப்பட்ட தொகை |
| சுயதொழில் கடன் வழங்குதல் | **100** | 15 | 20.00 | 4.12 |
| தவணைக் கொடுப்பனவுகள் | | 11 | | |
| சுயதொழில் உதவி வழங்குதல் | **50** | 05 | 2.50 | 0.25 |
| தொழில்முயற்சி அபிவிருத்திச் செயலமர்வுகளை நடாத்துதல் | **45** | 01 | 4.06 | 0.01 |

# - 06-

# அதிகாரசபையின் பணிகளை நிறைவேற்றுவதற்குத் தேவையான அல்லது சாதகமான அனைத்தையும் செய்தல்.

அதிகாரசபையின் பணிகளை நிறைவேற்றுவதற்குத் தேவையான அல்லது சாதகமான அனைத்தையும் செய்தல் என்ற விடயத்தின் கீழ் பின்வரும் செயற்திட்டங்களும் நிகழ்ச்சிகளும் நடைமுறப்படுத்தப்படுகின்றன.

6.1. ரணவிரு மாபிய சுரக்கும் நிகழ்ச்சி
6.2. ரணவிரு மாபிய பாதுகாப்புப் பயன்கள்
6.3. ரணவிரு மன்ற மாவட்ட அறிவூட்டல்
6.4. ரணவிரு ஞாபகார்த்தச் செயற்திட்டம்
6.5. மயிலப்பிட்டி பூங்கா பராமரிப்பு மற்றும் அபிவிருத்திச் செயற்பாடுகள்
6.6. யாகபத்தை - ரணவிரு முதியோர் பாதுகாப்பு இல்லம் மற்றும் வள நிலையம்
6.7. “விருசர” சிறப்புரிமை அட்டை
6.8. “சென்ஹிரு சியபத” செயற்திட்டம்
6.9. ரணவிரு மகளிர் மற்றும் சிறுவர் அபிவிருத்தி அலகு

## 6.1. ரணவிரு மாபிய சுரக்கும் நிகழ்ச்சி

யுத்தத்தின் போது மரணித்த மற்றும் காணாமல் போன விவாகமான இராணுவ வீரர்களின் பெற்றோர்களுக்கு 2007 ஆம் ஆண்டின் நவம்பர் 21 திகதி முதல் இராணுவ வீரர்களின் சம்பளத்தில் 25% அவர்களுடைய பெற்றோருக்குச் செலுத்தப்படுகின்றது. எனினும் மேற்குறித்த காலப் பகுதிக்கு முன்னர் மரணித்த விவாகமான இராணுவ வீரர்களின் பெற்றோர்களுக்கு எந்தவொரு கொடுப்பனவும் வழங்கப்படுவதில்லை. அந்தப் பெற்றோருக்கு நன்றிக்கடன் செலுத்துவதற்காக எமது அதிகாரசபையினால் அரசாங்க ஓய்வூதியம் பெறாத இராணுவ வீரர்களின் பெற்றோர்களுக்கு ரணவிரு மாபிய சுரக்கும் நிகழ்ச்சியின் கீழ் நிதியுதவி வழங்கப்படுகின்றது.

இப்பயன்களுக்குப் பங்களிப்பு வழங்கும் ஒவ்வொரு பெற்றோருக்கும் ரணவிரு சேவா அதிகாரசபையினால் தேசிய சேமிப்பு வங்கியில் கணக்குகள் ஆரம்பிக்கப்பட்டு, பெற்றோர்

இருவரில ஒருவர் மாத்திரம் இருப்பாராயின், மாதாந்தம் 2,250.00 ரூபா வீதமும், பெற்றோர் இருவரும் இருப்பார்களாயின், தலா 1,500.00 ரூபா வீதம் 3,000.00 ரூபாவும் வழங்கப்படுகின்றது.

06 மாதங்களுக்கு ஒருமுறை ரணவிரு சேவா அதிகாரசபையினால் இந்தப் பணம் வைப்புச் செய்யப்படுவதுடன் ஒரு மாதத்தில் அந்த மாதத்திற்குரிய தொகையை மாத்திரமே மீளப் பெற முடியும். தெரிவுசெய்யப்பட்ட பயனாளிகளின் கணக்குகளில் வைப்புச் செய்யப்படும் பணத்தை உரிய பயனாளியால் மாத்திரமே மீளப் பெற முடியும். பயனாளி மரணித்தால் கணக்கு இரத்தாகிவிடும். கணக்குப் புத்தகத்தையும் இறப்புச் சான்றிதழின் பிரதியொன்றையும் அதிகாரசபைக்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். அப்போது உயிருடன் இருக்கும் ஆளின் பணத் தொகையை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.2018 ஆம் ஆண்டில் 1280 பேருக்கு பயன்கள் வழங்கப்பட்டுள்ளன.

## 6.2. ரணவிரு மாபிய ரெகவரண பயன்கள்

யுத்தத்தின் போது பயங்கரவாதத் தாக்குதலுக்கு உள்ளாகி உயிர் துறந்த, காணாமல் போன மற்றும் அங்கவீனமுற்ற, மருத்துவக் காரணங்களுக்காக ஓய்வுநிலையிலுள்ள (ரணவிரு சேவா அதிகாரசபைச் சட்டத்தின் கீழ் உள்ளடங்கும்) இராணுவ வீரர்களின் உயிர்வாழும் பெற்றோருக்கு வழங்கப்படும் மாபிய ரெகவரண கொடுப்பனவு (ரூபா. 750.00) மாதத்துக்கு ஒருமுறை வழங்கும் பணி ரணவிரு சேவா அதிகாரசபையின் மாபிய ரெகவரண பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றது. இந்தக் கொடுப்பனவு, இலங்கை வங்கி, மக்கள் வங்கி, தேசிய சேமிப்பு வங்கி மற்றும் பிரதேச அபிவிருத்தி வங்கி என்பவற்றில் திறக்கப்படும் மாபிய ரெகவரண கணக்குகளில் மாத்திரமே வைப்புச் செய்யப்படும்.

இராணுவ வீரர்களுக்கு பல பிள்ளைகள் இருந்த போதிலும் உயிர்வாழும் இராணுவ வீரரின் தாய்க்கும் தந்தைக்கும் தனித் தனியாக மாதமொன்றுக்கு 750/- ரூபா வீதம் கிடைக்கும். மரணித்த இராணுவ வீரரொருக்கு உயிர் வாழும் இராணுவ வீரரின் பிள்ளையொன்று இருப்பின், மரணித்த இராணுவ வீரருக்காக கொடுப்பனவு வழங்கப்படும். தாய், தந்தை உயிர் வாழும் வரையில் மாத்திரம் இக்கொடுப்பனவு கிடைக்கும். இந்தக் கொடுப்பனவை வேறு எவருக்கும் உரிமை மாற்றம் செய்ய முடியாது.தாய், தந்தை மரணித்தவுடன் உரிய வங்கியில் வைப்புப் புத்தகத்தை ஒப்படைக்க வேண்டும் என்பதுடன் ரணவிரு சேவா அதிகாரசபையின் மாபிய ரெகவரண பிரிவில் உரிய ஆளின் இறப்புச் சான்றிதழின் பிரதியொன்றை ஒப்படைக்க வேண்டும்.

கொடுப்பனவைப் பெறுபவருக்காக 06 மாதங்களுக்கு ஒரு முறை ஒவ்வொரு வருடமும் ஜூன் 15 மற்றும் டிசம்பர் 15 ஆம் திகதிகளுக்கு முன்னர் உயிர்வாழ்வதை உறுதிப்படுத்தும் சான்றிதழொன்றை கிராம் உத்தியோகத்தர் சான்றுப்படுத்தியதன் பினன்ர் ரணவிரு சேவை அதிகாரசபையின் மாபிய ரெகவரண பிரிவுக்கு அனுப்புதல் வேண்டும். அதற்கிணங்க, 2018 ஆம் ஆண்டில் 35,842 பேருக்கு மாபிய ரெகவரண கொடுப்பனவு உரிமை வழங்கப்பட்டது.

## 6.3. ரணவிரு மன்ற மாவட்ட அறிவூட்டல்

உயிர்த் தியாகம் செய்த இராணுவ வீரர்களின் நெருங்கிய உறவினர்கள் மற்றும் அங்கவீனமுற்ற ஓய்வுபெற்ற இராணுவ வீரர்களின் நெருங்கிய உறவினர்களுக்கிடையில் புரிந்துணர்வையும் தொடர்புகளை கட்டியெழுப்புவதன் மூலம் அக்குடும்பங்களின் சமூக உளவியல் அபிவிருத்தி மற்றும் இராணுவ வீரர்களின பெயர்களை எக்காலத்திலும் நினைவுபடுத்துவதற்கான ரணவிரு சேவா அதிகாரசபைக்கு சொந்தமான தொடர்பாடல் வலையமைப்பே “ரணவிரு சங்சத” ஆகும்.

இராணுவ வீரர் மன்றங்களை நிர்வகிப்பதற்காக இராணுவ வீரர் மன்ற பிரமாணக் குறிப்பு வெளியிடப்பட்டுள்ளது. தற்போது 273 ரணவிரு சங்சதகள் இயங்கி வருவதுடன் மாவட்ட மட்டத்தில் சங்சத உத்தியோகத்தர்களுக்கான அறிவூட்டல் நிகழ்ச்சிகளை நடாத்தும் செயற்பாடுகள் மாகாண பிரதிப் பணிப்பாளர்கள் ஊடாக மேற்கொள்ளப்படுகின்றன. அதற்கிணங்க, 2018 ஆம் ஆண்டில் 20 மாவட்ட அறிவூட்டல்கள் நடாத்தப்பட்டன.

## 6.4. ரணவிரு ஞாபகார்த்தச் செயற்திட்டம்



ரணவிரு சேவா அதிகாரசபையின் பணிகளை நிறைவேற்றுவதற்காகவும் சாதகமான அனைத்துச் செயற்பாடுகளை மேற்கொள்வதன் கீழும் தமது தாய்நாட்டின் ஸ்திரத் தன்மைக்காகவும் தமது உயிரைத் தியாகம் செய்த, தமது உடல் உறுப்புக்களை அர்ப்பணித்த தியாகிகளான இராணுவ வீரர்களின் புகழைப் பாதுகாப்பதற்கும் அவர்களின நலன்புரித் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கும் இச்செயற்திட்டத்தின் மூலம் நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. அதன் கீழ், பின்வரும் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

- **தேசிய இராணுவ வீரர் தின ஞாபகார்த்த விழா**

இலங்கைத் தாய்நாட்டை பயங்கரவாதத்திலிருந்து விடுவித்து, ஐக்கியம், இறைமை, மக்களின் பாதுகாப்பு என்பவற்றுக்காக தமது விலைமதிக்க முடியாத உயர்களைத் தியாகம் செய்த இராணுவ வீரர்களை நினைவுகூர்வதற்காகவும் தேசத்தின் உன்னத கௌரவத்திற்காகவும் தேசிய மற்றும் மாகாண மட்டங்களில் 2001 ஆம் ஆண்டு முதல் இன்று வரையில் இராணுவ வீரர் ஞாபகார்த்த விழாக்கள் நடாத்தப்படுகின்றன.

2018 ஆம் ஆண்டில் தேசிய இராணுவ வீரர் நினைவு வைபவம் பத்தரமுல்லை பாராளுமன்ற விளையாட்டு மைதானத்தில் இராணுவ வீரர் ஞாபகார்த்தப் பூங்காவில் இராணுவ வீரர் ஞாபகார்த்த தூபிக்கு அருகாமையில் அதிமேதகு ஜனாதிபதி அவர்களின் தலைமையில் முப்படைகளின், பொலிஸ் மற்றும் சிவில் பாதுகாப்பு படைகளின் உத்தியோகத்தர்களின் பங்கேற்புடன் 2018.05.19 ஆம் திகதி சிறப்பாக நடாத்தப்பட்டது.

- **மாகாண இராணுவ வீரர் ஞாபகார்த்த நிகழ்ச்சி**

வீரமிக்க இராணுவ வீரர்களையும் உறவினர்களையும் மாகாண மட்டத்தில் ஒன்றுசேர்த்து மாகாண ஆளுநர்கள் அடங்கலாக மாகாண சபைகளின் அமைச்சர்களின் பங்கேற்புடன் மாகாண மட்டத்திலான இராணுவ வீரர் ஞாபகார்த்த நிகழ்ச்சி நடாத்தப்படுகின்றது.

அதற்கிணங்க, 2018 ஆம் ஆண்டில் மாகாண இராணுவ வீரர் ஞாபகார்த்த நிகழ்ச்சிகள் பின்வரும் இடங்களில் நடாத்தப்பட்டன.

| மாகாணம் | நடைபெற்ற இடம் |
|---|---|
| மத்திய மாகாணம் | மயிலப்பிட்டி இராணுவ வீரர் பூங்கா |
| வடமேல் மாகாணம் | மாலிகாப்பிட்டி மைதானத்திற்கு அருகிலுள்ள இராணுவ வீரர் தூபிக்கு அருகில் |
| வட மத்திய மாகாணம் | அநுராதபுரம் இராணுவ வீரர் தூபிக்கு அருகாமையில் |
| வட மாகாணம் | பாதுகாப்புப் படை தலைமையகம் - பலாலி |
| கிழக்கு மாகாணம் | திருகோணமலை கோட்டை இராணுவ வீரர் தூபிக்கு அருகாமையில் |
| ஊவா மாகாணம் | பதுளை இராணுவ வீரர் தூபிக்கு அருகாமையில் |
| சப்ரகமுவ மாகாணம் | இரத்தினபுரி புதிய நகர இராணுவ வீரர் தூபிக்கு அருகாமையில் |
| தென் மாகாணம் | காலி பொலிஸ் நிலையத்திற்கு அருகாமையில் |

## 6.5. மயிலப்பிட்டி பூங்கா பராமரிப்பு மற்றும் அபிவிருத்திச் செயற்பாடுகள்

பயங்கரவாதிகளிடமிருந்து இலங்கையை விடுவிப்பதற்காக உயிர் தியாகம் செய்த இராணுவ வீரர்களை நினைவுகூர்வதற்காக நிர்மாணிக்கப்பட்ட இலங்கையின் முதலாவது தேசிய இராணுவ வீரர் பூங்கா இதுவாகும். கவர்ச்சியான ஒரு நிலப் பரப்பில் இயங்கி வரும் மயிலப்பிட்டி இராணுவ வீரர் ஞாபகார்த்தப் பூங்காவினுள், உயிர்த் தியாகம் செய்த அனைத்து இராணுவ வீரர்களின் பெயர்களும் சிற்ப ஆவணங்களில் குறிப்பிட்டு இராணுவ வீரர்களை நினைவுகூர்வதற்காக தூபியொன்று நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பூங்காவில், மின்சாரம் மற்றும் பராமரிப்புக்கான செலவுகள் ரணவிரு சேவா அதிகாரசபையினால் மேற்கொள்ளப்படுவதுடன் இலங்கை இராணுவத்திற்கு அதற்க ஒத்துழைப்பு வழங்கப்படுகின்றது.

## 6.6. யாகபத்தை - ரணவிரு முதியோர் பாதுகாப்பு இல்லம் மற்றும் வள நிலையம்



தாய் நாட்டுக்கா உயிர்த் தியாகம் செய்த முப்படைகளின் இராணுவ வீர்கள் மற்றும் பொலிஸ் வீரர்களின் (விவாகமான/விவாகமாகாத) அநாதரவான பெற்றோர் பற்றிய தகவல்கள் கிடைத்துள்ளதுடன், அவர்களில் சில பெற்றோர் தமது ஒரே பிள்ளை யுத்தத்தில் உயிர்த் தியாகம் செய்தததனால் தமது வயோதிபக் காலத்தில் ஆரவின்றி சமூகப் பாதுகாப்பு தேவைப்படுபவர்களாக உள்ளனர்.

அதனடிப்படையில் கமனி ரத்நாயக, மஹிந்த ரத்நாயக, ஞானாந்த ரத்நாயக உள்ளிட்ட குடும்ப உறவினர்களால் ரணவிரு சேவா அதிகாரசபைக்கு அன்பளிப்புச் செய்த அகுரஸ்ஸ யாகபெத்த பிரதேசத்தில் அமைந்துள்ள கட்டடத்தை “ரணவிரு முதியோர் பாதுகாப்பு இல்லம் மற்றும் வள நிலையம்” என்ற பெயரில் அபிவிருத்தி செய்து இயக்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

## 6.7. “விருசர” சிறப்புரிமை அட்டை



மூன்று தசாப்தங்களுக்கு மேலாக எல்ரீரீஈ பயங்கரவாதிகளுக்கு எதிராக நடைபெற்ற யுத்தத்தில் தமது உயிரையும் உடல் பாகங்களையும் நாட்டுக்காகத் தியாகம் செய்து யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வருவதற்கு போற்றத்தக்க விலைமதிக்க முடியாத பங்களிப்பு வழங்கிய இராணுவம், கடற்படை, வான் படை, பொலிஸ் மற்றும் சிவில் பாதுகாப்புச் சேவைகளைச் சேர்ந்த அங்கத்தவர்கள் செய்த விலைமதிக்க முடியாத அர்ப்பணிப்புகளுக்கு நன்றி தெரிவிப்பதற்காக அதிமேதகு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்களின் ஆசீர்வாதத்துடனும் கௌரவ பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவன்

விஜேவர்தன அவர்களின் எண்ணக்கருவின் அடிப்படையில் " விருசர சிறப்புரிமை அட்டை" உருவாக்கப்பட்டது. இந்த விருசர சிறப்புரிமை அட்டை இரண்டு கட்டங்களாக நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

முதலாம் கட்டம் முப்படைகள், பொலிஸ் திணைக்களம் மற்றும் சிவில் பாதுகாப்புப் படை என்பவற்றில் பணியாற்றி யுத்தச் செயற்பாடுகளின் போது உயிர்த் தியாகம் செய்த மற்றும் காணாமல் போன இராணுவ வீரர்களின் நெருங்கிய உறவினர்களுக்கும் யுத்தச் செயற்பாடுகளின் போது அங்கவீனமடைந்த இராணுவ வீரர்களுக்காகவும்

இரண்டாம் கட்டம் யுத்த காலப் பகுதியில் அதாவது 1983 ஆம் ஆண்டு முதல் 2009 ஆம் ஆண்டு வரையில் முப்படைகள், பொலிஸ் திணைக்களம் மற்றும் சிவில் பாதுகாப்புப் படை என்பவற்றில் சிறந்த முறையில் பணியாற்றி 2009 இல் உத்தியோகத்தர்களுக்குரிய 20 வருடங்கள், ஏனைய பதவிகளுக்கான 22 வருட அல்லது பெண் உத்தியோகத்தர்கள்/ ஏனைய பதவிகளுக்குரிய 15 சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்து ஏற்கனவே ஓய்வுபெற்றுள்ள அல்லது தொடர்ந்தும் சேவையில் ஈடுபட்டுள்ள இராணுவ வீரர்களுக்காக.

இச்செயற்திட்டம் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சு, ரணவிரு சேவா அதிகாரசபை என்பவற்றினால் கூட்டாக 2016 ஜனவரி 25 ஆம் திகதி முதல் நடைமுறைப்படுத்தப்படுகின்றது. ஏற்கனவே அரச மற்றும் அரச சார்பற்ற 68 நிறுவனங்கள் இச்செயற்திட்டத்துடன் இணைந்து இராணுவ வீரர் குடும்பங்களுக்கு பயன்களை வழங்கி வருகின்றன. இதன் மூலம் பயன்பெறுவோரின் எண்ணிக்கை சுமார் 120,000 ஆகும். அதற்கிணங்க, பயன் வழங்கும் நிறுவனங்களைப் பின்வரும் முறையில் வகைப்படுத்திக் காட்ட முடியும்.

- வங்கிகள்
- நிதி மற்றும் குத்தகை
- காப்புறுதி
- தொடர்பாடல்
- கல்வி மற்றும் தொழிற் பயிற்சி
- சுகாதாரம்
- போக்குவரத்து
- நுகர்வோர் வழங்கல்

அதற்கிணங்க, 2018.12.31 ஆந் திகதி வரையில் 41640 விருசர சிறப்புரிமை அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன.

## 6.8. "சென்ஹிரு சியபத" செயற்திட்டம்

யுத்தத்தின் ஆரம்பம் முதலே பாதுகாப்பு பிரிவுகளும் ஏனைய அமைச்சுக்களும் திணைக்களங்களும் நிறுவனங்களும் இராணுவ வீரர்களின் குடும்பங்களின் நலனோம்பல் விடயத்தில் பல்வேறு நிகழ்ச்சிகளை நடைமுறைப்படுத்தியிருந்தன. தற்போது ரணவிரு சேவை அதிகாரசபையும் வருடாந்தம் பல்வேறு நிகழ்ச்சிகளை நடைமுறைப்படுத்தி வருகின்றது. எனினும் இராணுவ வீரர்கள் எதிர்நோக்கும் உண்மையான பிரச்சினைகளும் அவர்களின் உண்மையான தேவைகள் எவை என்றும் இற்றைப்படுத்திய முறையில் முறையாக அடையாளம் காணப்பட்டிருக்கவில்லை. இராணுவ வீரர்களுக்கு அவர்களின் அவர்களுடைய பிரச்சினைகளையும் சிக்கல்களையும் முன்வைப்பதற்குச் சந்தர்ப்பம் வழங்கி அவர்களன் பிரச்சனைகளையும் முரண்பாடுகளையும் அடையாளம் கண்டு தீர்வு வழங்குவதற்கு ஒரு நிறுவனம் என்ற வகையில் தலையீடு செய்ய வேண்டிய தேவை ஏற்பட்டிருந்தது. அதனடிப்படையில், இராணுவ வீரர்கள் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகளையும் முரண்பாடுகளையும் அடையாளம் கண்டு மாவட்ட மட்டத்தில் நடாத்துவதற்குத் திட்டமிடப்பட்ட நடமாடும் சேவை நிகழ்ச்சிகளாக சென்ஹிரு சியபத நிகழ்ச்சி நடாத்தப்படுகிறது.

2018 ஆம் ஆண்டில் 4 சென்ஹிரு சியபத நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டுள்ளன.

| நடாத்தப்பட்ட மாவட்டம் | நடாத்தப்பட்ட இடம் மற்றும் திகதி | பங்கேற்றோர் |
|---|---|---|
| அநுராதபுரம் | சாலியபுரம் கஜபா ரெஜிமெண்ட் தலைமையகத்தில், 2018.06.21 | 927 |
| பொலனறுவை | மின்னேரிய காலாட்படைப பயிற்சி நிலையத்தில் 2018.08.28 | 753 |
| மொனராகலை | வெள்ளவாய இராணுவ முகாமில் 2018.09.04 | 810 |
| இரத்தினபுரி | குருவிட்ட கெமுணு ஹேவா படைப்பிரிவு 2019.11.09 | 587 |

## 6.9. ரணவிரு மகளிர் மற்றும் சிறுவர் அபிவிருத்தி அலகு

ரணவிரு சேவா அதிகாரசபையின் ஒரு புதிய செயற்திட்டமாக தாபிக்கப்பட்ட ரணவிரு மகளிர் மற்றும் சிறுவர் அபிவிருத்தி அலகு 2018 ஆம் ஆண்டில் 3 தலைமைத்துவப் பயிற்சி நிகழ்ச்சிகளை நடாத்தியது.பெண்களைத் தலைவர்களாகக் கொண்ட குடும்ப அலகுகளின் பெண்களை ஒன்றிணைத்து பலமாக வலுவூட்டுவதற்குத் தேவையான தலைமைத்துவப் பண்புகளையும் திறன்களையும் மனப்பாங்குகளை அபிவிருத்தி செய்யும் நோக்கில் இந்த தலையீடு மேற்கொள்ளப்பட்டது. 2018 ஆண்டில் நடைபெற்ற விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| தொடர் இலக்கம் | செயலமர்வு | நடாத்தப்பட்ட செயலமர்வுகளின் எண்ணிக்கை | இடம் |
|---|---|---|---|
| 01 | தலைமைத்துவப் பயிற்சிச் செயலமர்வு | 03 | வடமேல் மாகாணம்<br>கிழக்கு மாகாணம்<br>மேல் மாகாணம் |

| அதிகாரசபையின் பணிகளை நிறைவேற்றுவதற்குத் தேவையான அல்லது சாதகமான அனைத்தையும் செய்தல் | பௌதிக | | நிதி (ரூ.மி) | |
|---|---|---|---|---|
| | வருடாந்த இலக்கு | இலக்கை அடைதல் | வருடாந்த ஒதுக்கீடு | செலவிடப்பட்ட தொகை |
| மாபிய ரெகவரண | 37,250 | 35,842 | 327.83 | 318.06 |
| மாபிய சுரக்கும | 1,470 | 1,280 | 33.32 | 31.14 |
| மன்ற மாவட்ட அறிவூட்டல் | 20 | 20 | 1.00 | 0.29 |
| பெண்களுக்கான செயலமர்வுகளை நடாத்துதல் | 50 | 05 | 5.79 | 0.40 |
| இராணுவ வீரர் தினம் | 09 | 09 | 7.75 | 7.12 |
| விருசர சிறப்புரிமை அட்டைகள் வழங்குதல் | | 41640 | 1.00 | 0.01 |
| யாகபத்த முதியோர் இல்லத்தை அமைத்தல் | | | 1.02 | 0.56 |
| மயிலப்பிட்டி ரணவிரு ஞாபகார்த்தப் பூங்காவின் பராமரிப்பு | | | 0.84 | 0.56 |
| சென்ஹிரு சியபத செயற்திட்டம் | 04 | 04 | 4.00 | 0.52 |

# 1999 ஆம் ஆண்டின் 54 ஆம் இலக்க ரணவிரு சேவை அதிகாரசபைச் சட்டத்தின் மூலம் நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ள பணிகளை நிறைவேற்றும் எதிர்கொள்ளும் நிதித் தேவைகளைப் பெற்றுக் கொள்ளும் பிரச்சினை...

யுத்தத்தின் காரணமாக அங்கவீனமுற்ற இராணுவ வீரர்களுக்கும் மற்றும் உயிர்த் தியாகம் செய்த இராணுவ வீரர்களின் நெருங்கிய உறவினர்களும் சட்டத்தின் மூலம் வழங்கப்பட்டுள்ள பணிகளை நிறைவேற்றும் போது பல்வேறு செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான நிதி ஏற்பாடுகள் கிடைத்த பிரதான வழிமுறை லொத்தர் சபையின் நிதி கிடைத்தமையாகும். லொத்தர் சபையிடமிருந்து கிடைத்த நிதி 2017 ஆம் ஆண்டிலும் 2018 ஆம் ஆண்டிலும் சுமார் 50% ஆல் குறைவடைந்தமை, கொடைவள்ளல்களிடமிருந்து கிடைக்கும் அன்பளிப்புக்கள் வருடத்துக்கு வருடம் குறைவடைகின்றமை என்பவற்றின் காரணமாகவும் ஊழியர் சம்பளங்கள், கொடுப்பனவுகளுக்கு மேலதிகமாக நிறுவனத்தின் அனைத்து மீளெழும் செலவுகளும் நிறுவனத்தின் நிதிகளின் ஊடாக மேற்கொள்ளப்படுகின்றமை என்பவற்றின் காரணமாக அதிகாரசபை தற்போது கடுமையான நிதி நெருக்கடியை எதிர் நோக்கியுள்ளது.

2000 ஆம் ஆண்டு முதல் 2018 ஆம் ஆண்டின் இறுதி வரையில் லொத்தர் சபையிடமிருந்து கிடைத்த நிதிகள் தொடர்பான தகவல்களும் அபிவிருத்திச் செயற்திட்டங்களுக்கு அதிகாரசபையினால் வருடாந்தம் செலவிட்டுள்ள நிதி ஏற்பாடுகள் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| **ரணவிரு சேவா அதிகாரசபை** | | | |
|---|---|---|---|
| **லொத்தர் வருமான வரவு** | | | |
| **ஆண்டு** | **காலம்** | **வருமானம் (மில்லியன் ரூபா)** | **மொத்த செயற்திட்டச் செலவு (மில்லியன் ரூபா)** |
| 2000 | ஜூன் முதல் டிசம்பர் வரை | 24.06 | |
| 2001 | ஜனவரி முதல் டிசம்பர் வரை | 43.42 | 50.8 |
| 2002 | ஜனவரி முதல் டிசம்பர் வரை | 59.36 | 93.8 |
| 2003 | ஜனவரி முதல் டிசம்பர் வரை | 107.06 | 57 |
| 2004 | ஜனவரி முதல் டிசம்பர் வரை | 108.22 | 33 |
| 2005 | ஜனவரி முதல் டிசம்பர் வரை | 120.44 | 246 |
| 2006 | ஜனவரி முதல் டிசம்பர் வரை | 109.61 | 171 |
| 2007 | ஜனவரி முதல் டிசம்பர் வரை | 73.27 | 86 |
| 2008 | ஜனவரி முதல் டிசம்பர் வரை | 69.82 | 69.17 |
| 2009 | ஜனவரி முதல் டிசம்பர் வரை | 83.31 | 133.85 |
| 2010 | ஜனவரி முதல் டிசம்பர் வரை | 80.54 | 81.41 |

| | | | |
|---|---|---|---|
| 2011 | ஜனவரி முதல் டிசம்பர் வரை | 93.86 | 96.31 |
| 2012 | ஜனவரி முதல் டிசம்பர் வரை | 103.82 | 124.71 |
| 2013 | ஜனவரி முதல் டிசம்பர் வரை | 87.35 | 342.52 |
| 2014 | ஜனவரி முதல் டிசம்பர் வரை | 98.00 | 160.71 |
| 2015 | ஜனவரி முதல் டிசம்பர் வரை | 97.79 | 370.88 |
| 2016 | ஜனவரி முதல் டிசம்பர் வரை | 93.47 | 398.40 |
| 2017 | ஜனவரி முதல் டிசம்பர் வரை | 52.08 | 421.92 |
| 2018 | ஜனவரி முதல் டிசம்பர் வரை | 43.14 | 97.53 |
| | **மொத்தம்** | 1,548.62 | 3035.01 |



2000 - 2014 காலப் பகுதியில் கிடைக்கப் பெற்ற லொத்தர் சபை அன்பளிப்புக்களை அரச வங்கிகளில் முதலீடு செய்ததன் மூலமும் அதிகாரசபையின் சலுகைக் கடன் நிதியத்தில் முதலீடு செய்ததன் மூலம் நிதிகள் முகாமை செய்யப்பட்டன.

எனினும் இராணுவ வீரர்களுக்கான நலன்புரி அன்பளிப்புக்களுக்காக 2015 - 2018 காலப்பகுதியில் முன்னுரிமை வழங்கப்பட்டதன் காரணமாக ரணவிரு சேவா அதிகாரசபையிடமுள்ள நிதித் திரட்டு குறைவடைந்துள்ளது. 2019 ஆம் ஆண்டிற்கான அனுமதியளிக்கப்பட்ட வரவுசெலவுத்திட்டத்தின் கீழ் 36 மில்லியன் ரூபா மாத்திரமே நலனோம்பல் நிகழ்ச்சிகளுக்கு திரட்டு நிதியிலிருந்து செலவிடுவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

## 2010 ஆம் ஆண்டு முதல் 2018 ஆம் ஆண்டு வரையில் ரணவிரு சேவா அதிகாரசபையின் திரட்டு நிதியத்தின் மாற்றங்கள்

(ரூ. '000)

| ஆண்டு | வருமானம் | | | செலவு | | | மேலதிகம்/ (பற்றாக் குறை) | திரட்டில் ஏற்பட்ட மாற்றம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| | அரசாங்கத்தின் பங்களிப்பு | நிறுவனத்தின் வருமானம் | மொத்தம் | நிர்வாகம் | இராணுவ வீரர் நலனோம்பல் | மொத்தம் | | |
| 2010 | | | - | | | - | 0 | 4,50,080 |
| 2011 | 21,761 | 1,20,695 | 1,42,456 | 34,733 | 96,320 | 1,31,053 | 11,403 | 4,61,483 |
| 2012 | 35,590 | 1,35,564 | 1,71,154 | 44,144 | 1,24,715 | 1,68,859 | 2,295 | 4,63,778 |
| 2013 | 69,447 | 1,21,341 | 1,90,788 | 42,381 | 1,60,708 | 2,03,089 | (12,301) | 4,51,477 |
| 2014 | 2,51,819 | 1,29,199 | 3,81,018 | 51,351 | 3,42,521 | 3,93,872 | (12,854) | 4,38,623 |
| 2015 | 2,62,355 | 1,24,211 | 3,86,566 | 60,310 | 3,70,877 | 4,31,187 | (44,621) | 3,94,002 |
| 2016 | 3,24,095 | 1,20,230 | 4,44,325 | 77,936 | 3,98,402 | 4,76,338 | (32,013) | 3,61,989 |
| 2017 | 3,80,178 | 91,464 | 4,71,642 | 1,11,129 | 4,21,926 | 5,33,055 | (61,413) | 3,00,576 |
| 2018 | 3,86,763 | 73,164 | 4,59,927 | 92,562 | 3,89,813 | 4,82,375 | (22,448) | 2,78,128 |




மேலும் 2019 ஆண்டில் லொத்தர் சபையிடமிருந்து 41 மில்லியன் ரூபாவும் நிதிய ஊக்குவிப்பின் மூலமும் ஏனையவற்றின் மூலம் 15 மில்லியன் ரூபாவும் என 56 மில்லியன் ரூபா அதிகாரசபைக்கு வருமானமாகக் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. எனினும் உண்மையிலேயே மேற்படி வருமானத்தின் மூலம் அதிகாரசபைக்கு கிடைக்க முடியுமான வருமானம் சுமார் 30 மில்லியன் ரூபாவாக அமையும் என எதிர்வுகூற முடியும். அப்போது ஏற்படும் வருமானப் பற்றாக்குறையை திரட்டு நிதியத்திலிருந்து ஈடு செய்ய வேண்டி ஏற்படுவதுடன் அதற்கிணங்க 2019 டிசம்பர் 31 ஆம் திகதியில் அதிகாரசபையின் திரட்டு நிதியம் மேலும் குறைவடையும்.

அதற்கிணங்க, 2020 ஆம் ஆண்டில் இராணுவ வீரர்களின் நலனோம்பல் நிகழ்ச்சிகளுக்காக நிதிகளைப் பெறுவதில் ரணவிரு சேவா அதிகாரசபை சிரமங்களை எதிர்நோக்க வேண்டியிருக்கும்.

யுத்தம் முடிவடைந்து சுமார் ஒரு தசாப்தம் முடிவடைந்துள்ள நிலையில குறிப்பாக யுத்த அழிவின் காரணமாக அங்கவீனமடைந்துள்ள இராணுவ வீரர்களின் புனர்வாழ்வும் அவர்களைப் பராமரிப்பதும் சிக்கலான ஒரு பணியாக உள்ளது.

அங்கவீனமுற்ற 5431 இராணுவ வீரர்களில் சுமார் 80% பேருக்கு வழங்கப்பட்டுள்ள செயற்கை கால்கள் சுமார் 10 முதல் 20 வருடங்கள் வரை பழைமையானவையாக உள்ளன. இராணுவ வீரர்களுக்குப் புதிய செயற்கைக் கால்களை வழங்குவதற்கு 1400 மில்லியன் ரூபாவுக்கும் மேற்பட்ட தொகை செலவாகும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. அது தவிர, வருடாந்தம் அங்கவீனமுற்ற இராணுவ வீர்களுக்கு ஊன்றுகோல்கள், சக்கர நாற்காலிகள், சத்திர உபகரணங்கள் உள்ளிட்ட உதவி உபகரணங்களை கோரிக்கையின் அடிப்படையில் வழங்குவதற்கு குறைந்தபட்சம் 10 மில்லியன் ரூபா தேவைப்படும். மேலும் இராணுவ வீரர் முதுமையடையும் போது அவர்களின் உடல் ரீதியான, உள ரீதியான சுகாதாரப் பிரச்சினைகள் தீவிரமடைகின்றன. அதற்காக சமூக, உளவியல் மற்றும் சுகாதார ஊக்குவிப்பு நிகழ்ச்சிகளை நடைமுறைப்படுத்துவதற்கும் மரணித்த இராணுவ வீரர்களின் வாழ்க்கைத் துணைகளுக்காகவும் பிள்ளைகளுக்காகவும் செய்யப்பட வேண்டிய நலனோம்பல் செயற்பாடுகளுக்கும், சம்பளம் பெறாத பெற்றோருக்கு வழங்கப்படும் மாபிய சுரக்கும கொடுப்பனவுகளை வழங்குவதற்காகவும் ஆகக் குறைந்தது வருடமொன்றுக்கு 70 மில்லியன் ரூபா நிதி ஏற்பாடுகள் தேவைப்படுகின்றன.

| 2002 - 2019 சலுகைக் கடன் நிதியில் காணப்பட்ட கடன் மீதிகள் (அதிகாரசபைக்கு அறவிடப்பட வேண்டிய கடன்கள்) பற்றிய தகவல்கள் | |
|---|---|
| **ஆண்டு** | **தொகை (மில்லியன் ரூபா)** |
| 2002 | 1.9 |
| 2003 | 2 |
| 2004 | 14 |
| 2005 | 94.66 |
| 2006 | 175.18 |
| 2007 | 398.46 |
| 2008 | 374.18 |
| 2009 | 300 |
| 2010 | 310.88 |
| 2011 | 341.7 |
| 2012 | 349.56 |
| 2013 | 237.15 |
| 2014 | 297.785 |
| 2015 | 286.92 |
| 2016 | 217.56 |
| 2017 | 131 |
| 2018 | 83.65 |
| 2019 | 45 |




**<u>நடைமுறைப்படுத்தப்படும் அத்தியவசிய நலன்புரிச் செயற்திட்டங்களுக்குத் தேவையான நிதி ஏற்பாடுகள்</u>**

| தொடர் இலக்கம் | நடைமுறைப்படுத்தப்படும் அத்தியவசிய நலன்புரிச் செயற்திட்டங்கள் | எதிர்பார்க்கப்படும் வருடாந்த செலவு (ரூபா மில்லியன்) |
|---|---|---|
| 01 | அங்கவீன இராணுவ வீரர் உதவி உபகரணங்கள் வழங்குதல் | 10 |
| 02 | அங்கவீனமுற்ற இராணுவ வீரர்களுக்காக சுகாதார முகாம்களை நடாத்துதல் | 2 |
| 03 | மருத்துவ உதவி வழங்குதல் | 5 |
| 04 | மாணவர்களுக்கான நிதியுதவி வழங்குதல் | 25 |
| 05 | மாபிய சுரக்கும | 28 |
| | மொத்தம் | 70 |

அது தவிர, அதிகாரசபையின் சம்பளங்கள மற்றும் கொடுப்பனவுகள் அல்லாத மீளெழும் செலவுகள் சுமார் 35 மில்லியன் ரூபாவாகும். அதற்கிணங்க, வருடாந்த வரவுசெலவுத்திட்டத்தின் மூலம் ஆகக் குறைந்தது 100 மில்லியன் ரூபா நிதி ஏற்பாடுகளை ஒதுக்கீடு செய்வது அத்தியவசியமாகும். வருடாந்த வரவுசெலவுத்திட்டத்தில் நலன்புரி நிகழ்ச்சிகளை நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான நிதிகள் கிடைக்காத நிலையில் நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்துவதற்கு உடல் உறுப்புக்களைப் பறிகொடுத்து தியாகம் செயத்த 20353 பேரும் உயிர்த் தியாகம் செய்த 29932 இராணுவ வீரர்களின் குடும்ப அங்கத்தவர்களின் சமூக, உளவியல் மற்றும் நலன்புரி நடவடிக்கைகள் தடைப்படுவதனால் பாதுகாப்பு துறை அங்கத்தவர்கள் மற்றும் இராணுவ வீரர்கள் மீது காணப்பட்ட நம்பிக்கை பாதிக்கப்படுவதற்குக் காரணமாக அமைந்துள்ளது.

## நிதி ஏற்பாடுகள் காணப்படாமையினால் தற்போது தடைப்பட்டுள்ள செயற்திட்டங்கள்

### ரணவிரு கிராமங்கள் செயற்திட்டம்

1. உட்கட்டமைப்பு வசதி அபிவிருத்தி நிகழ்ச்சிகள்
2. ரணவிரு மாதிரிக் கிராமங்கள் நிகழ்ச்சிகள்
3. ரணவிரு கம்மான வீட்டுத் தோட்டப் பயிர்ச்செய்கை நிகழ்ச்சி
4. ரணவிரு கம்மான அங்கத்தவர் புரிந்துணர்வு மேம்பாட்டு நிகழ்ச்சி

## ரணவிரு ஞாபகார்த்தச் செயற்திட்டம்

1. உத்தம பூஜா விருது வழங்கும் நிகழ்ச்சி

### சுகாதாரத் துறை

1. மருத்துவ கிளினிக்குகள்
2. கண் கிளினிக்குகள்
3. மருத்துவக் கடன்
4. உளவியல் பயிற்சிச் செயலமர்வுகள்
5. சுகாதார ஊக்குவிப்பு நிகழ்ச்சிகள்

### புனர்வாழ்வு மற்றும் பராமரிப்பு நிகழ்ச்சி

1. அங்கவீனர் இராணுவ வீரர் பயிற்சிச் செயலமர்வு

**<u>இராணுவ வீரர் அபிவிருத்தி நிகழ்ச்சி</u>**

1. தலைமைத்துவப் பயிற்சிச் நிகழ்ச்சிகள்
2. சங்சத மற்றும் சங்சதகளுக்கு இடையிலான அங்கத்தவர்கள் மத்தியில் நல்லுறவை மேம்படுத்துதல்
3. சங்சத கொத்தணி நிகழ்ச்சிகள்
4. சங்சதகள் மத்தியிலான செயற்பாடுகள்
5. திடீர் அனர்த்த உதவி (இராணுவ வீரர் மரணிக்குமிடத்து மற்றும் இயற்கை அனர்த்தங்களின் போது நிதி உதவி வழங்குதல்)
6. நாடு முழுவதிலும் நடைமுறைப்படுத்தப்படும் ரணவிரு சங்சதகளின் உத்தியோகத்தர்களின் பிரதிதிகளின் பங்கேற்புடன் தேசிய மட்டத்தில் நடாத்தப்படுகின்ற "சங்சத சம்மேளனம்"
7. ரணவிரு சேவா அதிகாரசபையினால் நடைமுறைப்படுத்தப்படும் செயற்திட்டங்களின் பௌதிக முன்னேற்றம் அவதானிப்பு, இராணுவ வீரர்களின் தேவைப்பாடுகளை அடையாளம் காணுதல், சமூக, உளவில் தலையீடுகள் மேற்கொள்ளுதல் என்பவற்றைக் குறிக்கோளாகக் கொண்ட 07 நாள்கள அவதானிப்பு

**<u>கல்விச் செயற்திட்டம்</u>**

1. கணினிப் பயிற்சி நிலையம்
2. கல்வி மற்றும் தொழிற் பயிற்சி உதவி வழங்கல்
3. கலாசார பயிற்சி நிலையம்
4. வெளிநாட்டுப் புலமைப் பரிசில் (கல்வி மற்றும் விளையாட்டு)

**<u>இராணுவ வீரர்களின் குடும்ப அங்கத்தவர்களின் வருமான மட்டத்தை மேம்படுத்துவதற்காகவும் வேலை வாய்ப்பை உறுதிப்படுத்துவதற்காக வருமானம் உழைக்கும் நிகழ்ச்சிகள்</u>**

1. சுயதொழில் உதவி (50000 ரூபா உச்ச வரம்புக்கு உட்பட்ட வகையில்)
2. சுயதொழில் செயலமர்வுகள் (தொழில்முயற்சி அறிவு மற்றும் தொழில்நுட்ப/கைவினை அறிவு வழங்குதல்)

**<u>வீடமைப்புக் கடன்</u>**

1. வீடமைப்பு உதவி

**மகளிர் அபிவிருத்தி நிகழ்ச்சி**

குறிப்பாக உயிர்த் தியாகம் செய்த இராணுவ வீரர்களின் வாழ்க்கைத் துணைகள், தாய்மார் மற்றும் இராணுவ வீரர்களின் மகள்மார் ஆகியோரின் சமூக உளவில், சுகாதார, பொருளாதார அபிவிருத்தியை இலக்காகக் கொண்டு நடைமுறைப்படுத்தப்படும் விசேட மகளிர் அபிவிருத்தி நிகழ்ச்சி

1. ரணவிரு மகளிர் அபிவிருத்தி நிகழ்ச்சி
2. ரணவிரு மகளிர் வெளிக்களப் பயிற்சிச் செயலமர்வு
3. பொருளாதார வலுவூட்டல்
4. தலைமைத்துவப் பயிற்சிச் நிகழ்ச்சிகள்

# கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

## தலைவர்
ரணவிரு சேவா அதிகாரசபை

**ரணவிரு சேவா அதிகாரசபையின் 2018 டிசம்பர் 31 இல் முடிவடைந்த வருடத்திற்கான நிதிக் கூற்றுக்கள் மற்றும் ஏனைய சட்ட மற்றும் ஒழுங்குபடுத்தல் தேவைப்பாடுகள் தொடர்பாக 2018 ஆம் ஆண்டின் 19 இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 பிரிவின் அடிப்படையிலான கணக்காய்வாளர் அதிபதியின் அறிக்கை**

### 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 கருத்துக்கள்

ரணவிரு சேவை அதிகாரசபை 2018 டிசம்பர் 31 இல் முடிவடைந்த வருடத்திற்கான நிதி நிலைமைக் அறிக்கையும் அன்றைய தினத்தில் முடிவடைந்த வருடத்திற்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று, தேறிய சொத்துக்களில் ஏற்பட்ட மாற்றங்கள் தொடர்பான கூற்று, அன்றைய தினத்தில் முடிவடைந்த வருடத்திற்கான காசுப் பாய்ச்சல் கூற்று, நிதிக் கூற்றுக்களுடன் தொடர்புடைய குறிப்புக்கள், சுருக்கிய முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளைக் கொண்ட 2018 டிசம்பர் 31 இல் முடிவடைந்த வருடத்திற்கான நிதிக் கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்புச் சட்டத்தின் 154 (1) பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 ஆம் ஆண்டன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டம் மற்றும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டம் என்பவற்றின் கீழ் எனது பணிப்புரையின் பேரில் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. அரசிலமைப்புச் சட்டத்தின் 154 (6) ஆம் பிரிவிற்கு இணங்க எனது அறிக்கை உரிய காலத்தில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

எனது அறிக்கையின் தகுதிவாய்ந்த அதிகாரசபையின் 2018 டிசம்பர் 31 ஆம் திகதியில் உள்ள நிதி நிலை மற்றும் அன்றைய தினத்தில் முடிவடைந்த வருடத்திற்கான அதன் நிதி செயலாற்றுகை மற்றும் நிதி மற்றும் காசுப்பாய்ச்சல் இலங்கை அரசாங்கத்தின் அரசு துறையின் இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமைகளை பிரதிபலிக்கின்றன என்பது எனது கருத்தாகும்

### 1.2 தகுதிவாய்ந்த அபிப்பிராயத்திற்கான அடிப்படை

2016 டிசம்பர் 23 ஆம் திகதி 2,100,00 ரூபா என விலை மதிப்பிடப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருந்த மோட்டார் வாகனமொன்று 2018 ஜனவரி 26 ஆம் திகதி 1,373,000 ரூபாவுக்கு விற்கப்பட்டிருந்ததுடன் அந்த வாகனத்தின் மதிப்பிடப்பட்ட பெறுமதிக்குப் பதிலாக 1,500,000 ரூபா அடிப்படைச் செலவை அடிப்படையாகக் கொண்டு சொத்துக்களை அகற்றுவதன் மூலம் கிடைத்த இலாபம் கணிப்பிடப்பட்டிருந்தது. அதன் காரணமாக, சொத்து

அகற்றல் இலாபம் 1,661,425 ரூபாவினால் மேலதிகமாகக் காட்டப்பட்டிருந்ததுடன் மோட்டார் வாகன பெறுமானத் தேய்வு 1,101,425 ரூபாவினால் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

இலங்கை கணக்காய்வுத் தர நியமங்களுக்கு ஏற்ப என்னால் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. இக்கணக்ககாய்வுத் தர நியமங்களுக்கு கீழமைந்த எனது பொறுப்பு, இவ் அறிக்கையின் நிதிக் கூற்றின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பகுதியின் கீழ் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது தகுதிவாய்ந்த அபிப்பிராயத்திற்கான அடிப்படையை வழங்கும் வகையில் என்னால் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ள கணக்காய்வுச் சான்றுகள் போதுமானது என்றும் உசிதமானது என்றும் நான் நம்புகின்றேன்.

## 1.3 <u>நிதிக் கூற்றுக்கள தொடர்பாக முகாமைத்துவத்தினதும் நிர்வாகத் தரப்பினரதும் பொறுப்புக்கள்</u>

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட ஒன்றிணைந்த நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக் கூற்றுக்களைத் தயார்படுத்தும் போது, அதிகாரசபையை தொடர்ந்தேர்ச்சியாக நடாத்திச் செல்வதற்கான இயலுமையை தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும் என்பதோடு, முகாமைத்துவம் நிறுவனத்தை கலைப்பதற்கு கருதுவதாயின் அல்லது வேறு மாற்றீடொன்று காணப்படாத சந்தர்ப்பத்தில், செயற்பாட்டுப் பணிகளை நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமாயின் தவிர தொடர்ச்சியான நிலைத்திருப்புத் தன்மையின் அடிப்படையில் கணக்குப் பதிவு செய்தல் மற்றும் நிறுவனத்தின் தொடர்ச்சியான இருப்புக்குரிய காரணங்களை தெளிவுபடுத்துவது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

அதிகாரசபையின நிதி அறிக்கைப்படுத்தல் செயற்பாடுகள் தொடர்பான பொறுப்பு, நிருவாகத்திற்குப் பொறுப்பான தரப்பிற்குரியதாகும்.

2018 ஆம் ஆண்டு இலக்கம் 19 இனையுடைய தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16 (1) இன் உப பிரிவிற்கு ஏற்ப, அதிகாரசபையின் வருடாந்த மற்றும் தற்போதைய நிதிக் கூற்றுக்களை தயார்படுத்துவதற்கு இயலுமான வகையில் சொந்த வருமானம், செலவுகள், சொத்துக்கள் மற்றும் வைப்புக்கள் தொடர்பாக உரியவாறு கணக்கேடுகள் மற்றும் அறிக்கைகளை பேணி வருவது அவசியமாகும்.

## 1.4 நிதிக் கூற்றுக் கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டுமொத்தமாக நோக்குகையில் நிதிக் கூற்றுக்கள், மோசடி அல்லது தவறின் காரணமாக ஏற்படும் எண்ணளவில் பொய்யான கூற்றுக்கள் அற்றதென நியாயமான உறுதியினை வழங்குதலும் எனது அபிப்பிராயத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள கணக்காய்வாளரின் அறிக்கையை வெளியிடுவதும் எனது நோக்கமாகும். நியாயமன சான்றுப்படுத்தல் உயர்மட்டத்திலான ஒரு உயர் மட்டத்திலான சான்றுப்படுத்தலாக உள்ள போதிலும், இலங்கை கணக்காய்வுத் தரநியமங்களுக்கு இணங்க கணக்காய்வு மேற்கொள்ளும் போது அது எப்போதும் அளவுசார் குறைகூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான உறுதிப்படுத்தலாக அமையமாட்டாது. மோசடி மற்றும் தவறுகள் தனியாக அல்லது கூட்டாக அல்லது அழுத்தங்கள் காரணமாக அளவு ரீதியில் குறைத்து மதிப்பீடுகள் செய்யப்பட முடியும் என்பதோடு, இந்நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் பூர்த்தி செய்வதற்காக பரீட்சிப்பாளர்களினால் எடுக்கப்படும் பொருளாதார தீர்மானங்களில் தாக்கம் செலுத்த முடியும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

என்னால் தொழிற்துறைத் தீர்ப்பு மற்றும் தொழிற்துறை கட்டமைப்புடன் இலங்கை கணக்காய்வு தர நியமங்களுக்கு ஏற்ப கணக்காய்வு செய்யப்பட்டுள்ளது. மேலும்,

- மோசடி அல்லது தவறின் காரணத்தினாலான நிதிக் கூற்றுக்களில் ஏற்பட முடியுமான பிறழ் கூற்றின் ஆபத்துக்களை இனங்கண்டு அவற்றை மதிப்பிட்டு, அத்தகைய ஆபத்துக்களுக்கு துலங்கல் காண்பிக்கும் விதத்தில் உசிதமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதனால் மோசடி மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படும் ஆபத்துக்களை தவிர்த்துக் கொள்வதற்கும், எனது கருத்துரைக்கு போதியளவிலானதும் பொருத்தமானதானதும் கணக்காய்வு சான்றினை பெற்றுக் கொள்வது எனது கருத்துக்களுக்கு அடிப்படையாக அமையும். போதியளவு பிறழ் கூற்றுக்களினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது தாக்கங்களை விட மோசடியினால் ஏற்படும் தாக்கங்கள் பாரியதாக அமைவதோடு, கூட்டு நடவடிக்கை,போலியான ஆவணங்களை தயாரித்தல், வேண்டுமென்றே தவிர்த்தல் அல்லது உள்ளக கட்டுப்பாடுகளை தவிர்ந்திருத்தல் என்பன மோசடிகள் ஏற்படுவதற்கு காரணமாகின்றன.

- கால அவகாசங்களுக்கு ஏற்ப உசிதமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளக கட்டுப்பாடு தொடர்பான தெளிவினைப் பெற்றிருந்தாலும் , உள்ளக கட்டுப்பாட்டின் பயனுறுதித் தன்மை தொடர்பான கருத்துரையினைத் தெரிவிப்பதற்கு நாடுவதில்லை.
- பிரயோகத்தில் உள்ள கணக்கியல் கோட்பாடுகள் மற்றும் கணக்கியல் மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்படும் தொடர்புடையதான வெளிப்படுத்தல்களின் தகுதிகள் பாராட்டத்தக்கது.

- நிகழ்வுகள் மற்றும் சூழ்நிலைகள் காரணமாக அதிகாரசபையின் இருப்பு தொடர்பில் போதியளவு நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என்பது பற்றி பெற்றுக் கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளின் அடிப்படையில் கணக்கியலுக்காக நிறுவனத்தின் தொடர்ச்சியான இருப்பு தொடர்பான அடிப்படை இங்கு தீர்மானிக்கப்படுகின்றது. போதியளவு நிச்சயமற்றதன்மை காணப்படுவதாக நான் முடிவு

செய்தல் நிதிக் கூற்றுக்களில் அது தொடர்பான வெ ளிப்படுத்தல்களுக்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது அவதானம் செலுத்தப்பட வேண்டும் என்பதோடு, அவ்வெ ளிப்படுத்தல்கள் போதியதற்றதாக இருப்பின் எனது கருத்தை மாற்றியமைக்க வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலை மீது தொடர்ச்சியான இருப்பு நிறைவடைவதற்கும் கொள்ள முடியும்.

- வெளிப்படுத்தல்களை உள்ளடக்கிய நிதிக் கூற்றுக்களை முன்வைத்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கம் மதிப்பீட்டுக்கு உட்பட்டுள்ளதோடு, அதற்கு அடிப்படையாக அ மைந்த கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகள் உசிதமான மற்றும் நியாயமான வகையில் நிதிக் கூற்றில் உள்ளடக்கப்பட்டிருப்பதனை பாராட்டுகின்றது.
  எனது கணக்காய்வினுள் அடையாளங் காணப்பட்ட முக்கிய கணக்காய்வுத் தேடல்கள், முக்கிய உள்ளக கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் நிர்வாகத் தரப்பினருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 2. ஏனைய சட்ட மற்றும் ஒழுங்குபடுத்தல் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் கீழ் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பில் விசேட ஏற்பாடுகள் உள்ளடங்கும்.

- 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின 12 (அ)ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளுக்கு இணங்க, எனது அறிக்கையில் .......... இற்கான அடிப்படை பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கங்களைத் தவிர, கணக்காய்வுக்குத் தேவையான அனைத்துத் தவல்களும் விளக்கங்களும் என்னால் பெறப்பட்டதுடன், உரிய நிதி அறிக்கைகள் அதிகாரசபையினால் பேணப்பட்டு வந்துள்ளமை எனது சோதனையின் போது தெரிய வந்தது.
- 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6 (1) (ஈ) (III) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளுக்கு இணங்க அதிகாரசபையினால் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்கள் முன்னைய வருடத்திற்கு இணங்கியவையாக உள்ளன.
- -2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6 (1) (ஈ) (iv) ஆம் பிரிவில் குறிப்பிட்டுள்ள தேவைகளுக்கு இணங்க முன்னைய வருடத்தில் என்னால் வழங்கப்பட்ட சிபாரிசுகள், சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக் கூற்றுங்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் பெறப்பட்ட சாட்சிகளின் அடிப்படையில் போதியளவு விடயங்களின் மட்டுப்பாடுகளுக்கு உட்பட்டவகையில், பின்வரும் கூற்றுக்களை வெளிப்படும் அளவுக்கு எந்தவொன்றும் எனது கவனத்திற்கு ஈர்க்ப்படவில்லை.

- 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 (ஈ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளுக்கு இணங்க அதிகாரசபையின் ஆளுநர் சபையின் உறுப்பினர் ஒருவருக்கு ஒப்பந்தமொன்று தொடர்பில் நேரடியான அல்லது மறைமுகமான சாதாரண வியாபார நிலைமைக்கு அப்பாற்பட்ட தொடர்பு உள்ளமை.

- 2018 ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டடத்தின 12 (ஊ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளுக்கு இணங்க பின்வரும் அவதானிப்புக்களைத் தவிர எழுத்து மூலமான சட்டமொன்றுக்கு அல்லது ஆளுநர் சபையினால் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு மாற்றமாகச் செயற்பட்டுள்ளமை.

| | சட்டத்திற்கான/ ஏற்பாட்டுக்கான இணைப்பு | விபரம் |
|---|---|---|
| (அ) | நி.பி. 756 | முன்னைய வருடத்தில் நடாத்தப்பட்டிருந்த பொருட் தொகை மதிப்பாய்வு தொடர்பான அறிக்கைகள் 2018 மே மாதம் 10 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த அறிக்கைக்கு இணங்க 31 அலகுகளுடன் தொடர்புடைய 170 விடயங்களில் பற்றாக்குறைகள் காணப்பட்டுள்ளன. பொருட் தொகை மதிப்பாய்வை மீண்டும் ஒரு முறை 2018 ஒக்டோபர் 19 ஆந் திகதி மேற்கொண்டு சமர்ப்பிக்கப்பட்டருந்த அறிக்கைக்கு இணங்க 18 அலகுகளுடன் தொடர்புடைய 68 விடயங்களில் குறைபாடுகள் காணப்பட்ட போதிலும் காணமல் போன பொருட்கள் தொடர்பில் 2018 டிசம்பர் 31 ஆம் திகதி வரையில் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | 2002 மே 24 ஆம் திகதிய 21 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கை | ரணவிரு சேவா அதிகாரசபையினால் நிதியாண்டு முடிவடைந்து 150 நாட்களுக்குள் மீளாய்வாண்டுக்கான செயலாற்றுகை அறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், 2015, 2016, 2017 ஆம் ஆண்டுகளுக்கான செயலாற்றுகை அறிக்கை 2018 டிசம்பர் 31 ஆம் திகதி வரையில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | நி.பி. 371 | பணியை பூர்த்தி செய்த உடனே முற்பணங்கள் செலுத்தி முடிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் 2014 ஆம் ஆண்டில் அதிகாரசபை இரண்டு உத்தியோகத்தர்களுக்கு 5 சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்டிருந்த 1,830,450 ரூபா முற்பணங்களை 2018 டிசம்பர் 31 ஆம் திகதி வரையில் செலுத்தி முடிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

- 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின 12 (உ.தொ.நி ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைக்களுக்கு இணங்க பின்வரும் அவதானிப்புக்கள் தவிர, அதிகாரசபையின் அதிகாரங்கள், பணிகள் மற்றும் செயற்பாடுகளுக்கு இணங்காத முறையில் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளமை.

  அதிகாரசபையினால் நடைமுறைப்படுத்தப்பட்ட ரணவிரு மாபிய ரெகவரண கொடுப்பனவுத் திட்டத்தின் கீழ் ஒரு தாய்க்கும் ஒரு தந்தைக்கும் தலா 750 ரூபா வீதமான கொடுப்பனவை மாத்திரம் செலுத்த முடியும் என்ற போதிலும் 2016 ஜூன் மாதம் முதல் 2017 நவம்பர் மாதம் வரையான 18 மாத காலப் பகுதியில் கணக்குரிமையாளர்கள் இரண்டு பேருக்கு ஒரு அரச வங்கியினால் 5,941,500 ரூபா செலுத்தப்பட்டிருந்தது. இது தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட உள்ளக விசாரணைகளின போது மேற்படி பெறுமதி தொடர்பில் மோசடி நிகழ்ந்துள்ளமையும் அது தொடர்பில் சட்ட நடவடிக்கை எடுப்பதற்காக சிபாரிசு செய்யப்பட்டிருந்தமையும் அவதானிக்கப்பட்டது.

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 (ஏ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளுக்கு இணங்க அதிகாரசபையின் வளங்களைச் சிக்கனமாகவும் வினைத்திறன்மிக்கதாகவும் பயனுறுதி வாய்ந்த முறையிலும் காலப் பகுதிகளினுள் உரிய சட்டதிட்டங்களுக்கு இணங்கிய முறையில் பெறுகை செய்யப்படவில்லை என்பது.

(அ) மீளாய்வாண்டிற்காக ரணவிரு சேவா அதிகாரசபைக்கான கட்டடங்களை நிர்மாணிப்பதற்காக பொதுத் திறைசேரியினால் வழங்கப்பட்டிருந்த 1,500,000 ரூபா மூலதன ஏற்பாடு குறிப்பான ஒரு செயற்பாட்டுக்கும் பயன்படுத்தப்படாமல் செயற்பாடற்றுக் காணப்பட்டது.

(ஆ) 2017 டிசம்பர் 31 இல் உள்ளவாறான 15,656,250 ரூபா மீள் மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதியைக் கொண்டிருந்த 2887 சதுர அடி பரப்பைக் கொண்ட தலைமையகக் கட்டடத்தின் மேல் மாடி 2012 ஆம் ஆண்டு முதல் பயன்படுத்தப்படாதுள்ளமை அவதானிக்கப்பட்டது. அதிகார சபையினால் 2016 டிசம்பர் மாதத்தில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த 42,138 ரூபா பெறுமதியன 06 கணினி மேசைகள் 2018 டிசம்பர் 31 ஆம் திகதி வரையிலும் பயன்படுத்தப்படாது களஞ்சியத்தில் காணப்பட்டது.

(இ) அதிகாரசபைக்கான குளிரூட்டித் தொகுதியொன்றின தேவை உரிய முறையில் மதிப்பீடு செய்து குளிரூட்டி இயந்திரங்களைக் கொள்வனவு செய்வதற்குப் பதிலாக முகாமைத்துவ சபையின் அனுமதியின அடிப்படையில் வாடகைக்கு குளிரூட்டி இயந்திரங்களைப் பெற்றுக்கொள்வதற்காக மீளாய்வாண்டின் 09 மாதங்களில் 2,057,442 ரூபா செலவிடப்பட்டிருந்தது. வாடகை அடிப்படையில் பெறும் போது பெறுகை வழிகாடடல் கோவையின் 1.2.1(ஈ) இற்கு தகுதியுள்ள ஆர்வம் காட்டுகின்ற தரப்பினருக்கு பெறுகையில் பங்கேற்பதற்கு நியாயமான சம வாய்ப்பு வழங்கப்பட வேண்டியிருந்த போதிலும் இந்தப் பெறுகைக்காக ஒரு வழங்குநரிடமிருந்து மாத்திரம் விலை மனுக்கள் கோரப்பட்டிருந்தமையினால் சந்தையிலுள்ள ஏனயை போட்டியாளர் வழங்குநர் நிறுவனங்களுக்கு நியாயமான வாய்ப்பு வழங்கப்படாமை அவதானிக்கப்பட்டது.

டிபிள்யு.பீ.சீ. விக்ரமரத்ன
கணக்காய்வாளர் நாயகம்

# இறுதிக் கணக்குகள் கூற்று

# ரணவிரு சேவா அதிகாரசபை
## 2018-12-31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று

| | | 2018 | | 2017 | |
|---|---|---|---|---|---|
| | | ரூபா சதம் | ரூபா சதம் | ரூபா சதம் | ரூபா சதம் |
| சொத்துக்கள் | | | | | |
| **நடைமுறைச் சொத்துக்கள்** | | | | | |
| காசு மற்றும் அதற்குச் சமனானவைகள் | 1 | | 195,368,953.76 | | 160,099,333.03 |
| வைப்புக்கள் | 2 | | 3,35,141.38 | | 5,87,141.38 |
| முற்பணக் கொடுப்பனவுகள் | 3 | | 2,31,930.29 | | 2,81,679.25 |
| கிடைக்க வேண்டிய கடன் மற்றும் வட்டி | 4 | 8,36,89,967.50 | | 13,14,64,784.77 | |
| கழி- | | | | | |
| ஐயக் கடன் ஒதுக்கம் | | 5,91,634.24 | | 10,00,536.29 | |
| | | | 8,30,98,333.26 | | 13,04,64,248.48 |
| எழுதுபொருள் கையிருப்பு | 5 | | 19,75,657.08 | | 11,94,524.82 |
| மொத்தம் 01 | | | 28,10,10,015.77 | | 29,26,26,926.96 |
| | | | | | |
| **நடைமுறையல்லாச் சொத்துக்கள்** | | | | | |
| நிலையான வைப்புக்கள் | 6 | | 2,80,00,000.00 | | 2,80,00,000.00 |
| பூர்த்தியடையாத வேலைகள் | 7 | | | | 3,00,000.00 |
| உட்கட்டமைப்பு பொறித் தொகுதி மற்றும் உபகரணங்கள் | 8 | | 1,72,27,899.52 | | 2,07,10,076.94 |
| காணிகள் மற்றும் கட்டடங்கள் | 9 | | 29,45,20,491.58 | | 23,17,13,776.55 |
| மொத்தம் 02 | | | 33,97,48,391.10 | | 28,07,23,853.49 |
| **மொத்தச் சொத்துக்கள் (03= 01+02)** | | | **62,07,58,406.87** | | **57,33,50,780.45** |
| | | | | | |
| **பொறுப்புக்கள்** | | | | | |
| **நடைமுறைப் பொறுப்புக்கள்** | 10 | | 1,21,43,994.50 | | 1,57,92,840.24 |
| மொத்தம் 04 | | | 1,21,43,994.50 | | 1,57,92,840.24 |
| | | | | | |
| **நடைமுறையல்லாப் பொறுப்புக்கள்** | 11 | | 2,27,15,134.83 | | 1,90,02,101.37 |
| மொத்தம் 05 | | | 2,27,15,134.83 | | 1,90,02,101.37 |
| | | | | | |
| **மொத்தச் பொறுப்புக்கள் (06=04+05)** | | | 3,48,59,129.33 | | 3,47,94,941.61 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **தேறிய சொத்துக்கள் (03-06)** | | | **58,58,99,277.54** | | **53,85,55,838.84** |
| **தேறிய சொத்துக்கள்/உரிமையாண்மை** | | | | | |
| ரணவிரு தூதரு சுவசெத நிதியம் | | | 76,710.00 | | 76,710.00 |
| ஊழியர் கடன் சுழற்சி நிதியம் | | | 1,03,87,500.44 | | 1,00,05,801.86 |
| மீள் மதிப்பீட்டுத் திரட்டு | | | 10,47,07,082.46 | | 10,47,07,082.46 |
| திரட்டிய மேலதிகம் / (பற்றாக்குறை) | | | 47,07,27,984.64 | | 42,37,66,244.52 |
| **மொத்த தேறிய சொத்துக்கள்/உரிமையாண்மை (01+02-06)** | | | **58,58,99,277.54** | | **53,85,55,838.84** |

மேலே உள்ள நிதி நிலைமைக் கூற்றை 01 முதல் 31 வரையான பக்கங்களில் உள்ள கணக்கீட்டு கொள்கைகள் மற்றும் கொள்கைகளின் செம்மையாக்கங்களுடன் சேர்த்து வாசிப்பது அவசியமாகும்.

முகாமைத்துவ சபையின் ஆலோசனைக்கு இணங்க தயாரிக்கப்பட்ட இந்த நிதிக் கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் பொறுப்பை 2019.02.06 ஆந் திகதி முகாமைத்துவ சபை பொறுப்பேற்றது. அதிகாரசபையின் பிரதான நிதி உத்தியோகத்தராக தலைவரும், முகாமைத்துவ சபையின் சார்பில் தலைவர் மற்றும் உப தலைவர், பிரதான நிதி உத்தியோகத்தராக உதவிப பணிப்பாளர் (நிதி) ஆகியோர் இந்த நிதிக் கூற்றில் கையொப்பமிட்டு வெளியிட்டுள்ளனர்.

____________________
ரீ.வீ. செம்புக்குட்டிஆரச்சி
உதவிப் பணிப்பாளர் (நிதி)
ரணவிரு சேவா அதிகாரசபை

____________________
உபுலாங்கனீ மாலகமுவ
உப தலைவர்
ரணவிரு சேவா அதிகாரசபை

____________________
மேஜர் ஜெனரல் ஜே.ஜே.
பீ.எஸ்.ரீ. லியனகே
(ஓய்வுபெற்றவர்)
ஆர்எஸ்பி விஎஸ்வி யூஎஸ்பி
என்டிசி எல்எடிஎம்சி ஐபி.
தலைவர்
ரணவிரு சேவா அதிகாரசபை

## ரணவிரு சேவா அதிகாரசபை
## 2018.12.31 இல் முடிவடைந்த வருடத்திற்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று

| | குறிப்புக்கள் | 2018<br>ரூபா சதம் | 2017<br>ரூபா சதம் |
|---|---|---|---|
| வருமானம்<br>அரசாங்கத்தின் பங்களிப்பு | **12** | 38,67,62,994.23 | 38,01,78,386.14 |
| சுபிரி வாசனா சம்பத லொத்தர் வருமானம் | | 4,31,36,528.00 | 5,20,88,646. 16 |
| வட்டி வருமானம் | **13** | 1,32,99,718.86 | 79,10,693.25 |
| ஊழியர் கடன் வட்டி வருமானம் | | 3,81,698.58 | 2,86,234.19 |
| சேவைக் கட்டணங்கள் | **14** | 76,31,911.76 | 1,15,58,510.46 |
| ரணவிரு கொடி விற்பனை வருமானம் | **15** | 45,00,000.00 | 52,55,196.27 |
| அன்பளிப்புக்கள் | **16** | 16,19,550.00 | 28,23,979.69 |
| வாகன விற்பனை வருமானம் | **17** | 18,93,547.95 | 11,84,298.63 |
| நிறுத்தி வைக்கப்பட்ட இலாப வருமானம் | | | 49,80,632.23 |
| சென்ஹிரு சியபத செயற்திட்டம் | | | 41,11,975.00 |
| வழங்குநர்களைப் பதிவு செய்தல் மற்றும்<br>கேள்விபத்திர விற்பனைக் கட்டணங்கள் | | | 42,700.00 |
| ஐயக் கடன் மிகை ஒதுக்கம் | | 4,08,902.05 | |
| ஏனைய கிடைப்பனவுகள் | **18** | 2,91,609.52 | 12,21,024.42 |
| **மொத்த வருமானம் (01)** | | **45,99,26,660.955** | **47,16,42,276.44** |
| | | | |
| **செலவினம்** | | | |
| தனிப்பட்ட வேதனாதிகள் | **19** | 5,21,14,140.08 | 5,17,67,672.03 |
| பிரயாணச் செலவுகள் | **20** | 12,86,754.00 | 13,11,342.34 |
| வழங்கல்கள் | **21** | 53,24,329.22 | 84,77,836.33 |
| பராமரிப்புச் செலவு | **22** | 39,27,087.52 | 26,18,422.35 |
| ஒப்பந்தச் சேவைகள் | **23** | 1,94,50,065.52 | 2,15,28,786.41 |
| ஏனைய மீளெழும் செலவுகள் | **24** | 20,11,278.25 | 1,09,13,439.79 |
| செயற்திட்டச் செலவுகள் | **25** | 38,98,12,548.99 | 42,19,25,728.61 |
| பெறுமானத் தேய்வு | | 77,08,395.77 | 1,08,04,439.88 |
| நிதிச் செலவுகள் | **26** | 7,39,964.58 | 1,75,097.02 |
| மீள் மதிப்பிடப்பட்ட நட்டம் | | | 35,32,189.64 |
| **மொத்தச் செலவு (02)** | | 48,23,74,563.93 | 53,30,54,954.40 |
| காலப் பகுதிக்கான மொத்த மேலதிகம்/<br>(பற்றாக்குறை) (01-02) | | (2,24,47,902.986) | (6,14,12,677.96) |

# ரணவிரு சேவா அதிகாரசபை

## 2018.12.31 இல் முடிவடைந்த வருடத்திற்கான காசுப் பாய்ச்சல் கூற்று

| | குறிப்புக்கள் | 2018<br>ரூபா சதம் | 2017<br>ரூபா சதம் |
|---|---|---|---|
| **தொழிற்பாட்டுச் செயற்பாடுகள் மூலமான காசுப் பாய்ச்சல்** | | | |
| மேலதிகம்/ (பற்றாக்குறை) | | (2,24,47,902.98) | (6,14,12,677.96) |
| | | | |
| **செம்மையாக்கங்கள்** | | | |
| பெறுமானத் தேய்வு | | **77,08,395.77** | 10,6804,439.88 |
| பணிக்கொடை கொடுப்பனவுகளுக்கான ஒதுக்கீடு | | 23,91,553.63 | 16,19,723.02 |
| வட்டி வருமானம் | | (13,299,7 18.86) | (79,10,693.25) |
| நிறுத்தி வைக்கப்பட்ட இலாப வருமானம் | | - | (49,80,632.23) |
| மீள் மதிப்பிடப்பட்ட நட்டம் (இலாபம்) | | 35,32,189.64 | |
| வாகன விற்பனை வருமானம் | | (18,93,547.95) | (11,84,298.63) |
| அதிவிசேட அம்சங்கள் | | 5,035,35 7.61 | (29,65,826.36) |
| | | | |
| **தொழிற்பாட்டு மூலதன மாற்றத்திற்கு முன்னர் செயற்பாட்டு மேலதிகம்/ (பற்றாக்குறை)** | | **(2,25,05,862.78)** | **(6,24,97,775.89)** |
| எழுதுப் பொருட்களின் கையிருப்பு (அதிகரிப்பு)/ குறைவடைதல் | | (7,81,132.26) | (707 ,266.37) |
| வைப்புக்கள் (அதிகரிப்பு)/ குறைவடைதல் | | 2,52,000.00 | (3,41,500.00) |
| முற்பணக் கொடுப்பனவுகள் (அதிகரிப்பு)/ குறைவடைதல் | | 49,748.96 | (77,977.15) |
| செலுத்த வேண்டிய காசு அதிகரிப்பு/ குறைவடைதல், | | (36,48,845.74) | 16,34,725.58 |
| கிடைக்க வேண்டிய காசு (அதிகரிப்பு/ குறைவடைதல் | | 4,73,65,915.22 | 6,52,37,795.49 |
| பணிக்கொடைக் கொடுப்பனவு | | (11,97,181.52) | 588, 750.43 |
| தொழிற்பாடுகள் மூலம் உழைக்கப்பட்ட காசுப் பாய்ச்சல் அதிகரிப்பு/ (குறைவடைதல்) | | **1,95,34,641.88** | **2,38,36,752.09** |
| தொழிற்பாட்டு செயற்பாடுகள் மூலம் கிடைத்த தேறிய காசுப் பாய்ச்சல் | | **1,95,34,641.88** | **2,38,36,752.09** |
| | | | |

| | | | |
|---|---|---|---|
| **முதலீட்டுச் செயற்பாடுகள் மூலமான காசுப் பாய்ச்சல்** | | | |
| காணி விற்பனை/ (கொள்வனவு) | | (10,640.00) | |
| வாகன உபகரண விற்பனை/ (கொள்வனவு) | | 19,23,000.00 | 26,20,600.00 |
| இயந்திர உபகரண விற்பனை/ (கொள்வனவு) | | (565, 727.00) | (33,08,600.00) |
| தளபாட விற்பனை/ (கொள்வனவு) | | (4,11,373.00) | (3,00,792.26) |
| பூர்த்தியடையாத வேலைகள் | | | (3,00,000.00) |
| வட்டி வருமானம் | | 1,32,99,718.86 | 79,10,693.25 |
| முதலீட்டுச் செயற்பாடுகள் மூலம் கிடைத்த தேறிய காசுப் பாய்ச்சல் | | **1,42,34,978.86** | **66,21,900.99** |
| | | | |
| **நிதிச் செயற்பாடுகள் மூலமான காசுப் பாய்ச்சல்** | | | |
| அரசாங்கத்திடிருந்து கிடைத்த நிதி | | 15,00,000.00 | 1,10,00,000.00 |
| அரசாங்கத்திக்கு நிதியை மீளச் செலுத்துதல் | | | (8,391.00) |
| அரசாங்கத்தின நிதிகளை வேறு நிறுவனங்களுக்கு மாற்றுதல் | | | (99,91,609.00) |
| நிதிச் செயற்பாடுகள் மூலமான தேறிய காசுப் பாய்ச்சல் | | **15,00,000.00** | **10,00,000.00** |
| காசு மற்றும் காசுக்கு நெருக்கமானவற்றின் தேறிய (அதிகரிப்பு/ குறைவு) | | **3,52,69,620.74** | **3,14,58,653.08** |
| | | | |
| காலப் பகுதியின் ஆரம்பத்தில் காணப்பட்ட காசு மற்றும் காசுக்கு நெருக்கமான விடயங்கள் | | **16,00,99,333.00** | 12,86,40,679.92 |
| காலப் பகுதியின் இறுதியில் காணப்பட்ட காசு மற்றும் காசுக்கு நெருக்கமான விடயங்கள் | 01 | **19,53,68,953.76** | **16,00,99,333.00** |

## ரணவிரு சேவா அதிகாரசபை

## 2018-12-31 ஆம் திகதியில் முடிவடைந்த வருடத்திற்கான மொத்த தேறிய சொத்துக்கள்/உரிமையாண்மை மாற்றக் கூற்று

| விபரம் | குறிப்புக்கள் | ரணவிரு தூதரு சுவசெத நிதியம் | ஊழியர் கடன் சுழற்சி நிதியம் | மீள் மதிப்பீட்டுத் திரட்டு | திரட்டிய மிகை/(பற்றாக்குறை) | மொத்த தேறிய சொத்துக்கள்/உரிமையாண்மை |
|---|---|---|---|---|---|---|
| | | | ரூபா சதம் | ரூபா சதம் | | ரூபா சதம் |
| **2017-01-01 இல் உள்ளவாறான மீதி (01)** | | 1,05,710.00 | 97,19,567.67 | 8,18,35,290.21 | 48,83,88,467.16 | 58,00,49,035.04 |
| செம்மையாக்கம் (02) | 27 | - | | 22,03,954.34 | (19,99,816.26) | 2,04,138.08 |
| பொருள் அன்பளிப்புக்கள் (03) | 28 | | | | 2,99,800.00 | 2,99,800.00 |
| கிடைக்க வேண்டிய ரணவிரு தூதரு சுவசெத நிதியம் (4) | | | | | | - |
| ரணவிரு தூதரு சுவசெத நிதியக் கொடுப்பனவுகள் (05) | | | | | | |
| ஊழியர் கடன் சுழற்சி நிதியத்திற்கான மாற்றல்கள் (06) | | - | 2,86,234.19 | | (2,86,234.19) | - |
| காணி கொள்வனவு (14) | | | | 2,10,00,000.00 | | |
| பணிக்கொடைக்கான ஒதுக்கீட்டுகள் | | | | | | |
| கணக்கிற்கான மாற்றல்கள் (18) | | | | | (12,23,294.22) | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| பணிக்கொடைக்கான ஒதுக்கீடு | | | | | | |
| கணக்கிற்கான மாற்றல்கள் (18) | | | | | (12,23,294.22) | |
| வாகன கொள்வனவு (15) | | | | 46,48,470.14 | | |
| | | **(29,000.00)** | | | | (29,000.00) |
| | | | | | | |
| நிறுத்தி வைக்கப்பட்ட இலாபக் கணக்கு (16) | | - | | (49,80,632.23) | | (49,80,632.23) |
| காலப் பகுதிக்கான மொத்த மேலதிகம்/ (பற்றாக்குறை)(08) | | - | | | (6,14,12,677.96) | (6,14,12,677.96) |
| அடையாளம் காணப்பட்ட மொத்த மேலதிகம்/ (பற்றாக்குறை) (09=02+03+04+05+06+07+08 | | (29,000.00) | 2,86,234.19 | 2,28,71,792.25 | (6,46,22,222.63) | (4,14,93,196.19) |
| 2017-12-31 இல் உள்ளவாறான மீதி (10=01+09) | | 76,710.00 | 1,00,05,801.86 | 10,47,07,082.46 | 423, 7,66,244.52 | 5,38,555,838.84 |
| செம்மையாக்கம் (11) | 27 | | | | 48,14,169.43 | 48,14,169.43 |
| காணி அன்பளிப்புக்கள் (12) | | | | | 6,05,90,000.00 | 6,05,90,000.00 |
| பொருள் அன்பளிப்புக்கள் (13) | 28 | | | | 44,240.00 | 44,240.00 |
| கட்டட | 76 | | | - | 55,63,250.00 | 55,63,250.00 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| அன்பளிப்புக்கள் (14) | | | | | | |
| வாகன கொள்வனவு (15) | | | | - | 83,006.84 | 83,006.84 |
| நிறுத்தி வைக்கப்பட்ட இலாபக் கணக்கு | | | | - | | - |
| ஊழியர் கடன் சுழற்சி நிதியத்தற்கான மாற்றல்கள் (17) | | | 3,81,698.58 | | (3,81,698.58) | - |
| பணிக்கொடைக்கான ஒதுக்கீடு கணக்கிற்கான மாற்றல்கள் (18) | | | | | (13,03,324.58) | (13,03,324.58) |
| காலப் பகுதிக்கான மொத்த மேலதிகம்/ (பற்றாக்குறை)(19) | | | | | (22,447 ,902.98) | (22,447 ,902.98) |
| காலப் பகுதிக்கான அடையாளம் காணப்பட்ட மொத்த மேலதிகம்/ (பற்றாக்குறை) (20=11+12+13+14+15+16+17+18+19) | | - | 3,81,698.58 | - | 4,69,61,740.13 | 4,73,43,438.71 |
| 31-12-2018 இல் உள்ளவாறான மீதி (21=10+20) | | 76,710.00 | 1,03,87,500.44 | 10,47,07,082.46 | 47,07,27,984.64 | 58,58,99,277.54 |

# ரணவிரு சேவா அதிகாரசபை
# நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்களுடன் தொடர்புடையவை.....
# 2018.12.31 இல் முடிவடைந்த வருடத்திற்கான
# 2018 ஆம் ஆண்டுக்கான நிதிக் கூற்றுக்கள் மற்றும் கணக்கீட்டுக் கொள்கைகள்

1) கூட்டிணைப்பின் விபரம்

1.1) அறிக்கை சமர்ப்பிக்கப்படும் கணக்கீட்டு அலகு மற்றும் அடிப்படை

ரணவிரு சேவா அதிகாரசபை, இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் ஒப்படைக்கப்பட்டுள்ள 1992 ஆம் ஆண்டின் 54 ஆம் இலக்க ரணவிரு சேவா அதிகாரசபைச் சட்டத்தின் மூலம் 1999 ஆம் ஆண்டு டிசம்பர் 23 ஆம் திகதி வர்த்தமானியில் வெளியிடப்பட்ட ஒரு அரச நிறுவனமாகும். 1999 ஆம் ஆண்டின் 54 ஆம் இலக்க ரணவிரு சேவா அதிகாரசபைச் சட்டத்தின் 3 ஆம் உப பிரிவு பின்னர் முறையே 2009 ஆம் ஆண்டின் 7 மற்றும் 2012 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க ரணவிரு சேவா அதிகாரசபை (திருத்தச்) சட்டங்கள் மூலம் திருத்தப்பட்டுள்ளது.

1.2) அடிப்படைக் குறிக்கோள், பணிகள் மற்றும் செயற்பாடுகளின் தன்மை.

ரணவிரு சேவா அதிகார சபைச் சட்டத்தின் மூலம் ஒப்படைக்கப்பட்டுள்ள இலக்குக் குழுக்களின் நலனோம்பலை ஊக்குவிப்பது அடிப்படைக் குறிக்கோளாகும்.

இந்தக் குறிக்கோள்கள் பின்வரும் ஆறு வகையான செயற்பாடுகளின் நலனோம்பலை ஊக்குவிப்பதாகும்.

I. வீடுகள் வழங்குதல் மற்றும் அதற்கு ஒத்துழைப்பு வழங்குதல்
II. யுத்தச் செயற்பாடுகளின் போது அங்கவீனமடைந்துள்ள ஆயுதப் படைகளினதும் பொலிஸ் படைகளினதும் அங்கத்தவர்களின் பிந்திய பராமரிப்பு அவர்களின் புனர்வாழ்வு
III. மருத்துவ வசதிகளை வழங்குதல் மற்றும் அதற்கு ஒத்துழைப்பு வழங்குதல்
IV. கல்வி மற்றும் உயர்கல்விக்கான அணுகலைப் பெறுவதற்கான வாய்ப்புக்களை வழங்குதல்.
V. பயனுறுதிவாய்ந்த வேலைவாய்ப்பை பாதுகாத்தல்
VI. அங்கவீனமடைந்த அங்கத்தவர்களுக்கு வேலை வாய்ப்பினை வழங்குவதற்காக தொழில்நுட்ப, விவசாய மற்றும் வர்த்தகத் தொழில் முயற்சிகளை தாபித்தல்

| 1.3) இலக்குக் குழுக்கள் | 1.5) ஊழியர் எண்ணிக்கை | 1.6) கணக்கு அறிக்கைகளுக்கு அனுமதிபெறப்பட வேண்டிய திகதி |
|---|---|---|
| ஆயுதப் படைகளையும் பொலிஸ் படையையும் சேர்ந்த யுத்தச் செயற்பாடுகளின் போது அங்கவீனமடைந்துள்ள அங்கத்தவர்கள் மற்றும் யுத்தச் செயற்பாடுகளின் போது மரணித்த அல்லது காணாமல் போன ஆயுதப் படைகளையும் பொலிஸ் படையையும் சேர்ந்த அங்கத்தர்களில் தங்கி வாழ்வோர். | முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தி 2012.10.16 ஆம் திகதிய DMS/C2/2/44 ஆம் இலக்க கடிதத்திற்கு இணங்க அனுமதியளிக்கப்பட்ட மொத்த ஊழியர் எண்ணிக்கை 89 (தலைவர், உப தலைவர் உள்ளடக்கப்படவில்லை) 2018.12.31 ஆம் திகதியில் உள்ளவாறான சேவையிலுள்ள மொத்த ஊழியர் எண்ணிக்கை 73 ஆகும். | கணக்கீட்டு வருடம் முடிவடைந்து பஞ்சாங்க வருடத்தில் 60 நாட்கள் முடிவடைவதற்குள் அனுமதியளிக்கப்பட வேண்டும். இந்த நிதிக் கூற்றுக்களுக்கு 2019 ஜனவரி ......... ஆம் திகதி முகாமைத்துவ சபையினால் அனுமதியளிக்கப்பட்டது. |
| **1.4) தலைமையக முகவரி** | **கணக்கீட்டு வருடம்** | |
| தலைமையகம் இல. 443, காலி வீதி, கொழும்பு 03 இல் அமைந்துள்ளது. | அதிகாரசபையின் கணக்கீட்டு வருடம் பஞ்சாங்க வருடமாகும். இந்த நிதிக் கூற்றுக்கள் 2018.01.01 முதல் 2018.12.31 வரையான வருடத்திற்கானதாகும். | |

'

.

# ரணவிரு சேவா அதிகாரசபை

## நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்களுடன் தொடர்புடையவை.....

## 2018.12.31 இல் முடிவடைந்த வருடத்திற்கான

**2) தயார்படுத்தலுக்கான அடிப்படை மற்றும் இணக்கப்பாடு**

**2.1) தயார்படுத்தலுக்கான அடிப்படை**

அதிகாரசபையின் ஐந்தொகையில் குறப்பிடப்பட்டுள்ள பின்வரும் விடயங்களைத் தவிர நிதிக் கூற்றுக்கள் பொதுவாக அங்கீகரிக்கப்பட்ட கணக்கீட்டுக் கோட்பாடுகளுக்கு இணங்க வரலாற்றுச் செலவுகளின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளன.

| விடயம் | தயார்படுத்தலுக்கான அடிப்படை | |
|---|---|---|
| வாகனங்கள் | தேறிய தீர்வையான பெறுமதி | |
| | | |
| **2.2) இணக்கப்பாட்டுக் கூற்று**<br><br>இந்த நிதிக் கூற்றுக்களில் நிதி நிலைமைக் கூற்று, நிதிச் செயலாற்றுகைக் கூற்று, காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் தேறிய சொத்துக்கள்/உரிமையாண்மை மாற்றக் கூற்று என்பவற்றுடன் குறிப்புக்களையும் கொண்டுள்ளது.<br><br>இந்த நிதிக் கூற்றுக்கள் இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தினால் 2009 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள இலங்கை அரச துறை கணக்கீட்டுத் தரநியமங்களுக்கு இணங்க, பெறுகை வழிகாட்டல் விதிக்கோவை-2006 (பொருட்கள் மற்றும் சேவைகள்) மற்றும் 2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டம் என்பவற்றை | 2.3) நிதிக் கூற்றுக்களுக்கான பொறுப்பு | இலங்கை அரச துறை கணக்கீட்டுத் தர நியம இல. 19 இற்கு இணங்கிய முறையில் ரணவிரு சேவா அதிகாரசபையின் நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும், சமர்ப்பிக்கும் பொறுப்பு அதிகாரசபையின் முகாமைத்துவ சபைக்குரியதாகும்.<br><br>**2.4) அடிப்படை மற்றும் சமர்ப்பிக்கும்**<br><br>**நாணய வகை**<br><br>அதிகாரசபையின் அடிப்படை |

| | | |
|---|---|---|
| உள்ளடக்கிய வகையில் அவற்றுக்கு ஒத்திசைவான முறையில் தயாரிக்கப்பட்டுள்ளன. ஏதேனும் ஒரு கொடுக்கல் வாங்கல் இலங்கை அரச துறை கணக்கீட்டுத் தரநியமங்களில் உள்ளடங்காத சந்தர்ப்பத்தில் சர்வதேச அரச துறை கணக்கீட்டு தரநியமங்கள் பயன்படுத்தப்படுவதுடன் அதிலும் உள்ளடங்காத விடத்து பட்டயக் கணக்காளர் நிறுவனத்தினால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள "Sri Lanka Statement of recommended practise for not-for profit organization" இற்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்படும். | | நாணய வகை இலங்கை ரூபா உள்ளதுடன், அதனை அடிப்படையாகக் கொண்டே இந்த நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. |

# ரணவிரு சேவா அதிகாரசபை

# நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்களுடன் தொடர்புடையவை.....

## 2018.12.31 இல் முடிவடைந்த வருடத்திற்கான

### 3) விசேட கணக்கீட்டு கொள்கைகள்

இந்த நிதிக் கூற்றுக்களை வாசகர்கள் நன்றாக விளங்கிக் கொள்வதற்கா முகாமைத்துவ சபையினால் பொருத்தமானதாகக் கருதப்படும் மேலதிக தகவல்கள் இப்பகுதியில் சிறப்பித்துக் காண்பிக்கப்பட்டுள்ளன.

இந்த நிதிக் கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டுள்ள பின்வரும் கொள்கைகள் எல்லாக் காலத்திற்கும் இணக்கமானதாக தயாரிக்கப்பட்டுள்ளது. வருடத்தினுள் மாற்றமடைந்த கணக்கீட்டுக் கொள்கைகள் அடங்கலாக அதிகாரசபையின் நிதி நிலைமையில் தாக்கம் செலுத்துகின்ற விசேட கணக்கீட்டு கொள்கைகள் இப்பகுதியில் சுருக்கமாகச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

### 3.1) அரசாங்கத்திடமிருந்த கிடைத்த நன்கொடைகளை கணக்கீடு செய்தல்.

மீளெழும் நன்கொடைகள்

அரசங்கத்திடமிருந்து கிடைத்த மீளெழும் நன்கொடைகள் வருமான செலவுக் கணக்கில் செம்மையாக்கம் செய்யப்படுகின்றன.

மூலதன நன்கொடைகள்

அதிகாரசபையின் செயற்பாடுகளுக்காக கிடைக்கும் மூலதன நன்கொடைகள் அரசாங்கத்தின் பங்களிப்பு (மூலதனம்) கணக்கில் கணக்கீடு செய்யப்படுவதுடன் ஏனைய நிறுவனங்களுக்கு மாற்றல் செய்வதற்காக கிடைக்கும் மூலதன நன்கொடைகள் அந்நிறுவனங்களின் பெயரில் கணக்கீடு செய்யப்படுவதுடன் வேறு நிறுவனங்களுக்கு மாற்றுவதற்காகக் கிடைக்கும் மூலதன நன்கொடைகள் அந்த நிறுவனத்தின் பெயரில் கணக்கீடு செய்யப்படுகின்றன.

### 3.2). சொத்துக்கள் மற்றும் அவற்றின் பெறுமதியை மதிப்பிடுவதற்கான அடிப்படை.

2018 ஆம் ஆண்டு முதல் சொத்துக்களின் பெறுமதி 5,000 ரூபாவுக்கு குறைவாகவும் ஒரு வருடத்திற்குக் குறைவான ஆயுட்காலத்தை கொண்டதாகவும இருப்பின் அது நுகர்வுப் பொருளாகக் குறிப்பிடப்பட்டு இந்த வருடத்திற்கான செலவாகக் காட்டப்பட்டுள்ளன. சொத்துக்களின் செலவு 5,000 அதிகமாயின் மற்றும் பயனுறுதி வாய்ந்த ஆயுட்காலம் ஒரு வருடத்திற்கு மேற்பட்டதாக இருப்பின் நிலையான ஒரு சொத்தாகக் கருதப்பட்டு கணக்கீடு செய்யப்படுகின்றது.

அன்பளிப்பாகக் கிடைத்த நிலையான சொத்தக்களின் செலவை அறிந்துகொள்வதற்கு சந்தை விலை அடிப்படையாகக் கொள்ளப்படுகின்றது. மேலும் கொள்வனவுப் பெறுமதியை கண்டுபிடிக்க முடியாத தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள், இயந்திரங்கள் மற்றும் பொறிகள் மற்றும் கட்டடங்கள் ஆகிய சொத்து வகைகளில் அடங்கும் விடயங்களுக்கு வரலாற்றுச் செலவில் நியாயமான பெறுமதிகளை குறிப்பிடுவதற்காக வெறுமனே மதிப்பீட்டுப் பெறுமதி பெறப்படுகின்றது.

# ரணவிரு சேவா அதிகாரசபை

## நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்களுடன் தொடர்புடையவை.....

### 2018.12.31 இல் முடிவடைந்த வருடத்திற்கான

**3.2.1) தொட்டுணர முடியுமான சொத்துக்கள் மற்றும் பெறுமானத் தேய்வு**

பெறுமானத் தேய்வு எளிய முறையில் செலவுப் பெறுமதியின் அடிப்படையில் பின்வரும் சதவீதங்களில் கணிக்க்பபட்டுள்ளன.

காணிகள்

கட்டடங்கள மற்றும் நிர்மாணங்கள 5%

தளபாடங்கள் மற்றும் உபகரணங்கள் 15%

இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் 15%

வாகனங்கள் 20%

**3.3) கையிருப்புக்கள்**

விற்பனை கையிருப்புக்கள், எழுதுபொருட்கள் மற்றும் நுகர்வுக் களஞ்சியப் பொருட் கையிருப்பு என்பன செலவுகளில் மதிப்பிடப்பட்டுள்ளன. முதலில் கிடைத்தை முதலில் விநியோகிக்கப்படுதல் அடிப்படையில் செலவுகள் கணிக்கப்பட்டுள்ளன.

**3.4) கடன்பட்டோர் மற்றும் ஏனைய அறவிடப்பட பெறுமதிகள்**

தீர்வையாகும் என்று மதிப்பிடப்பட்ட பெறுமதியில் கடன்பட்டோர் மற்றும் ஏனைய அறவிடப்பட மற்றும் ஏனைய அறவிடப்பட வேண்டிய பெறுமதிகள் குறிப்பிடப்பட்டுள்ளன.

**3.5) பொறுப்புக்கள் மற்றும் ஒதுக்கீடுகள்**

**3.5.1) நடைமுறைப் பொறுப்புக்கள்**

நடைமுறைப் பொறுப்புக்கள் என்ற பெயரில் குறிப்பிடப்பட்டுள்ளவை உரிய திகதிளில் செலுத்த வேண்டிய மற்றும் நிதி நிலைமைக் கூற்றுத் திகதியிலிருந்து ஒரு வருட காலத்தினுள் செலுத்த வேண்டிய பெறுமதிகளைக் குறிக்கும்.

பாதுகாப்பு அமைச்சினால் அறிமுகப்படுத்தப்பட்ட விருசர அட்டை தொழிற்பாட்டு செலவுகள் முப்படைகள் மற்றும் பொலிஸ் திணைக்களம் உள்ளிட்ட பல்வேறு நிறுவனங்களிடமிருந்து கிடைக்கப் பெற்ற அனுசரணைப் பணத்திலிருந்து மேற்கொள்ளப்படுகின்றன. இந்த அனுசரணைப் பணத்திலிருந்து குறித்த செலவுகளைச்

செய்ததன் பின்னர் பண மீதி இருக்குமாயின், அது முப்படைகள் மற்றும் பொலிஸ் திணைக்களத்திற்கு அந்த நிறுவனங்கள் வழங்கிய அனுசரணைப் பண நடைமுறைப் பொறுப்புக்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டுள்ளன.

இராணுவ வீரர்களுக்கு வீடுகளை அமைத்துக் கொடுப்பதற்காக நடைமுறைப்படுத்தப்படும் விருசர வீடமைப்புத் திட்டத்திற்குப் பல்வேறு தரப்பினராலும் அதிகாரசபைக்கு வழங்கப்படும் பணத்தில் உரிய பயனாளிகளுக்கு வீடுகளை நிர்மாணித்து கொடுப்பது அதிகாரசபையின் பொறுப்பாக இருப்பதனால் அந்த பணம் நடைமுறைப் பொறுப்புக்கள் என்பதன் கீழ் கணக்கீடு செய்யப்பட்டுள்ளன.

# ரணவிரு சேவா அதிகாரசபை

## நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்களுடன் தொடர்புடையவை.....

## 2018.12.31 இல் முடிவடைந்த வருடத்திற்கான

### 3.5.2) ஒதுக்கீடுகள்

ஊழியர்கள் சேவையில் இணைந்த திகதியிலிருந்து பூர்த்தி செய்யும் வருடங்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் நிதி ஏற்பாடுகளை ஒதுக்கீடு செய்வதே பணிக்கொடை கொடுப்பனவு ஒதுக்கத்திற்கான கணக்கீட்டுக் கொள்கையாகும்.

ஐந்தொகைத் தொகை திகதியில் உள்ளவாறான கடன்பட்டோரில் 1% ஆகும் விதத்தில் ஒதுக்கீடுகளைச் செய்வதே ஐயக் கடன் ஒதுக்கீட்டுக்கான கணக்கீட்டு கொள்கையாகும். (ஐயக் கடன் மிகை ஒதுக்கீடு நிதிச் செயலாற்றுகை அறிக்கை அறவிட முடியாக் கடன்களிலிருந்து கழித்துக் காண்பிக்கப்படும்).

### 3.5.3) எதிர்பாராத பொறுப்புக்கள்

2018-12-31 ஆந் திகதி வரையில் பல்வேறு தரப்பின்னர் அதிகாரசபைக்கு எதிராக பின்வரும் வழக்குகளைத் தாக்கல் செய்துள்ளனர்.

| வழக்கு இலக்கம் | முறைப்பாட்டாளர்கள் | விடயம் |
|---|---|---|
| SCFR/24/2008 | கே.ஏ. சீலவதீ | அடிப்படை உரிமை மீறலொன்று தொடர்பில் உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. |
| SCFR/41/2016 | அதிகாரசபையின் 7 உத்தியோகத்தர்கள் | அடிப்படை உரிமை மீறலொன்று தொடர்பில் உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. |

மேற்குறித்த வழக்குகள் நிதி நிலைமைக் கூற்றுத் திகதி வரையில் உயர் நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட்டு வந்ததுடன் எதிர்பாராத பொறுப்புக்கள் ஏற்படுமா என்று தீர்மானிக்க முடியாதிருப்பதனால் அதற்கு ஒதுக்கீடுகள் செய்யப்படவில்லை.

### 3.6 ) வருமானங்கள் மற்றும் செலவுகள்

பின்வரும் வருமானங்கள் தவிர ஏனைய வருமானங்களும் செலவுகளும் சேர வேண்டிய அடிப்படையில் கணக்கீடு செய்யப்படுகின்றன.

| வருமான விபரம் | அடிப்படை |
|---|---|
| ரணவிரு கொடி விற்பனை வருமானம் | சிறந்த மதிப்பீடு (Best Estimate) |

# ரணவிரு சேவா அதிகாரசபை

## நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்களுடன் தொடர்புடையவை.....

### 2018.12.31 இல் முடிவடைந்த வருடத்திற்கான

**3.6.1) லொத்தர் வருமானம்**

